பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 15 சனிக்கிழமை 29.04.2023 கதிர் 170

# கனவில் வாழ்கிறார் ஜனாதிபதி ரணில்



## கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஜேவிபி தலைவர் கடும் விமர்சனம்


ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க கனவு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். ஆனால் நாட்டு மக்கள் வாழ்வதற்கு வழியின்றி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இங்கு தான் பிரச்சினைகள் உள்ளது. ஆகவே ஈற்றில் ரணிலின் கனவு வெற்றியடைகின்றதா இல்லை மக்களின் நடைமுறை வெற்றி அடைகின்றதா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ☞2


## இது ரகசியம் அல்ல!

சீனத் தொலைக் காட்சியான சைனீஸ் குளோபல் டெலிவின் சுமார் 10 நாட்களுக்கு மேலாக இலங்கை வானலைகளில் பரீட்சார்த்த ஒலிபரப்பை மேற்கொண்டு வந்தது. ஆனால் திடீரென அதன் ஒளிபரப்பு நேற்றுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்தத் தொலைக்காட்சி அலைவரிசை ஏற்கனவே தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் கேபிள் இணைப்புக்கள் ஊடாக ஏற்கனவே ஒளிபரப்பாகியதுதான் என்றாலும், அது எப்படி வானலைகளில் பரீட்சார்த்த ஒளிபரப்பைத் தொடங்கியதது என்பது மர்மாகவே இருந்தது.

அண்மையில் இலங்கை அரசு தனது அரச தொலைக்காட்சி அலைவரிசைகளுக்குப் பங்காளர்களைக் கோரியபோது ☞2

## லிங்கம் உள்ளிட்ட 5 விக்கிரங்கள் வெடுக்குநாறியில் மீள பிரதிஸ்டை









(ந.லோகதயாளன்)

வவுனியா வடக்கு பிரதேச ஒலுமடுக் கிராமத்தின் வெடுக்குநாறி ஆதிலிங்ம் உள்ளிட்ட ஆலயத்தின் விக்கிரகங்கள் வெள்ளிக்கிழமை மீளவும் அதேயிடத்தில் வைக்கப்பட்டன.

வவுனியா மாவட்டம் நெடுங்கேணி, வெடுக்கு நாறியில் திட்டமிட்டுத் ☞2

கொரோனா உடல்கள் புதைப்பு விவகாரம்

## பிழையான வழிநடத்தல் ஏற்றுக்கொண்டது ஆட்சி



கொரோனா தொடர்பான ஜனாதிபதி செயலணி நிபுணர் குழு பிழையாக வழிநடத்தப்பட்டிருப்பதுடன் நிபுணர்குழுவின் ஒருசிலர் மக்களைப் பிழையாக வழிநடத்தியுள்ளதை ஏற்றுக்கொள்கிறேன் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்தலைவர்ரவூப் ஹக்கீம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ☞2

## வேட்பாளர்களின் அரச பணி தொடர்பில் நீதிமன்ற முடிவுக்கு ஏற்பவே தீர்மானம்

### பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு



உள்ளூராட்சி தேர்தல் வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையால் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச ஊழியர்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு அமைவாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணயநிதியத்தின்நீடிக்கப்பட்டநிதி வசதியின் கீழான உடன்பாட்டின் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது: ,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்க கொள்கை மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ☞2

## ஐஎம்எவ் ஒப்பந்தத்துக்கு நாடாளுமன்றம் அனுமதி

### 95 மேலதிக வாக்குகளால் தீர்மானம்

சர்வதேசநாணய நிதியத்தின் (ஐஎம்எவ்) நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தின் அனுமதி கோரி முன்வைக்கப்பட்ட தீர்மானம் 95மேலதிக வாக்குகளினால்நிறைவேற்றப்பட்டது,

தீர்மானத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் ☞3

## மாணவர்கள் போராட்டம்

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள களனி பல்கலைக்கழக மாணவ ஒன்றியதலைவரானகெலும் முதன்நாயக்கமற்றும்மாணவர் சங்கப் பிரதிநிதி டில்ான் ஹர்னவிடுவிக்கக்கோரியும், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை கண்டித்தும் களனி பல்கலைக்கழக முன்றலில் மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸாரின் அராஜயகம் ஒழிக்கப்பட வேண்டும், ரணில் விக்கிரமசிங்கவின் சர்வாதிகாரம் அகற்றப்படவேண்டும் என்றும் அவர்கள் அழுத்தமான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஜீன் 10, 2022 அன்று கல்வி அமைச்சுக்கு அருகில் நடைபெற்ற போராட்டத்தின் போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போராட்டத்தின் போது வாயிலை சேதப்படுத்தியதாக இரு மாணவர் சங்க தலைவர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக சட்டத்தரணிநுவான்போபகே தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை மீளப்பெறுமாறும், சட்ட மூலத்தினை கிழித்தெறியுமாறும் வலியுறுத்தி நுகேகொடவில் மாற்றத்துக்கான இளைஞர் அமைப்பினர்போராட்டத்தினைநடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்து - பசுபிக் பிராந்தியத்தில் பதற்றமான சூழல் உருவாகிறது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**பாதுகாப்பை பலப்படுத்த சீனா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா 100 பில்லியன் டொலர்களை செலவிடத் திட்டம்**



இந்து - பசுபிக் பிராந்தியத்தில் பதற்றமான சூழ்நிலை உருவாகி வருவதோடு, அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தமது விமானங்கள் மற்றும் போக்குவரத்துக் கப்பல்களைப் பயன்படுத்தி தங்கள் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக ☞2

## பசுமைப் பொருளாதாரத்துக்கான புதிய சட்டங்கள் அடுத்தாண்டில்

### ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

இலங்கை பசுமைப் பொருளாதாரமாக மாறுவதற்காக புதிய சுற்றாடல் சட்டம் உள்ளிட்டவற்றை அடுத்தாண்டுகொண்டுவருவதற்குத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2021/2022 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞2

அமெரிக்கா விதித்த

## தடையின் பின்னணியில் முன்னாள் ராணுவத்தினர்

### பொருமுகிறார் வசந்த கரன்னகொட

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் என்னை தடை செய்வது வெட்கக்கேடான விடயம் இந்தத் தடையின் பின்னணியில் இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரிகள் உள்ளனர் என்று முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஒவ் த பிளீட் வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு அனுமதிமறுக்கப்பட்டவர்கள் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கா எனது பெயரை தடை செய்யப்பட்டவர்களின் கறுப்புப் பட்டியலில் உள்வாங்கியுள்ளது. குறித்த தடை அறிவிப்புக்கள் தொடர்பில் எனக்கு சில சந்தேகங்கள் உள்ளன.

போர் முடிவடைந்து 14 வருடங்களி;ன் பின்னர் அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது ஆச்சரியமளிக்கின்றது.

முன்னாள் இராணுவ ☞2

ஐ.எம்.எவ். உடன்பாட்டை

## ஆதரிக்காதது எதற்கு? சஜித் கட்சி அறிக்கை

ஆளும் தரப்பின் அண்மைக்காலச் செயற்பாடுகள் சர்வதேசநாணயநிதியத்திற்குவழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமா என்ற சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளதாலும், மேலும் சில தீர்க்கமான காரணங்களாலும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தீர்மானத்தை ஆதரிக்கும் முடிவினை எடுக்க முடியாது ஐக்கிய மக்கள் சக்தி கடுமையான சிக்கலைஎதிர்கொண்டுள்ளதாகஅறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியானது, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட ☞2

## அமைச்சரவையில் நடமாடும் கண்ணுக்கு புலப்படாத சக்தி

அமைச்சரவையில் வாசுதேவநாணயக்காரவைத் தவிர அனைவரும் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதற்கு இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியபோதும் கண்ணுக்குப்புலப்படாதசக்தியொன்று அச்செயற்பாட்டை தாமதப்படுத்தியது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான உடன்பாட்டின் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவருடைய உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவேண்டும் என்பதை குறைந்த பட்சம் மூன்று சந்தர்ப்பங்களில் அமைச்சரவையில் உறுதியாக வலியுறுத்தினோம். அச்சமயத்தில்அமைச்சரவையில்இருந்த வாசுதேவநாணயக்கார மட்டுமே அதனை எதிர்த்தார். ஏனைய அனைவரும் அதற்கு ☞2

## 13ஐ முழுமையாக அமுல்ப்படுத்த இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும்

### ஜனநாயகக் கூட்டணியிடம் இந்தியத் தூதர் உறுதிமொழி

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும் என்ற உறுதிப்பாட்டை இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் கோபால்பாக்லே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்கியுள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன்கருணாகரம், மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் ஆகியோர் நேற்றுக் காலை இலங்கைக்கான இந்திய உயர்ஆணையரைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் உயர் ஆணையரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உயர்ஆணையரைச் சந்தித்த, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புத்தாண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்துகொண்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்தும் கலந்துரையாடியிருந்தனர்.

இலங்கை தமிழ் மக்களின் அபிலாகைள் தொடர்பாகவும் அந்த விடயம் சார்ந்த செயற்பாடுகளின் நிலைமை குறித்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய உயர்ஆணையருக்கு எடுத்துரைத்தனர் என்றுள்ளது.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச்சீனதொலைக்காட்சியும் உள்ளே நுழைந்திருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதாவது வழக்கம் போல இலங்கை அரசுக்கும் சீனாவுக்குமான நெருக்கம் காரணமாக இந்த அலைவரிசை விவகாரம் கண்டும் காணமலும் முன்னகர்த் தப்பட்டிருக்கலாம் என்பதே பெரும்பாலோரின் எதிர்பார்ப்பாக இருந்தது. இதில் என்ன புதுமை இருக்கப்போகிறது, எல்லாம் நடப்பதுதானே என்று நாம் கடந்துபோக முற்பட்டாலும் விவகாரம் அந்தளவோடு முடியாது என்றே தெரிகின்றது.

இந்தத் தொலைக்காட்சி அலைவரிசை விடயத்திலும் அதிலும் குறிப்பாக அது இலங்கையின்வடக்குகிழக்கு பகுதிகளில் தென்படுவதும் இந்தியாவின்கரிசனைக்குரிய விவகாரங்களாக இருக்கின்றன. அதனால் இது வெறும் தொலைக்காட்சி அலைவரிசைஎன்பதைத்தாண்டிய அரசியலாகவும்நகர்கின்றது. இதற்கு மத்தியில் சீனா, இலங்கைஅரசு ஆகியதரப்புக்களைத் தாண்டி தமிழர் தரப்பும்இந்தவிவகாரத்தோடு தொடர்புபட்டிருப்பது அல்லது மாட்டிக்கொண்டிருக்கிறது.

தொலைத் தொடர்புத் துறையிலும் ஊடாகத் துறையிலும் ஆணித் தரமாகக் காலூன்றியிருக்கக்கூடிய புலம்பெயர் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றே இந்த அலைவரிசைகளைக் கண்காணிக்கக்கூடிய இடத்தில் இருக்கின்றது. அந்த நிறுவனத்தின் கண்காணிப்புக்கு மத்தியிலேயே சீனத் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பது இலங்கையில் பிரச்சினை இல்லை. ஆனால், இந்தியாவில் அது சிக்கலுக்குரியது. ஏனெனில் அந்த நிறுவனம் இந்தியாவிலும் பெரும் வியாபாரங்களைக் கொண்டிருக்கிறது. அதிலும் தென்னிந்தியத் திரைப்படத் துறையில் அது கொடிகட்டிப் பறக்கின்றது. ரஜினிகாந்த், கமல்காசன், வடிவேல் ஏன்று முன்னணி நட்சத்திரங்களின் படங்களையெல்லாம் இப்போது அந்த நிறுவனம்தான் தயாரித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் இலங்கையில் நடந்த சீனத் தொலைக்காட்சி விவகாரம், இந்தியாவில் அதன் வியாபாரத்திற்கு நெருக்கடிகளைக் கொண்டுவரக்கூடும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். கொழும்பிலுள்ள இந்திய வட்டாரங்கள் இது தொடர்பில் மோப்பம் பிடித்து டில்லிக்கு ஏற்கனவே அறிக்கைகளை அனுப்பிவிட்டன என்றும் தகவல். அதனால்தானோ என்னவோ சீனப் பரீட்சார்த்த ஒளிபரப்புத் திடீரெனநிறுத்தப்பட்டு, இன்று அந்த நிறுவனத்தினருடன் அவசரக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இடிமின்னல் -

## கனவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான உடன்பாட்டின் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவருடைய உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின்ஜனாதிபதிபங்குச் சந்தையை மூடப்போவதாக அறிவித்துள்ளார். அது அவரது பைத்தியக்காரத்தனத்தின் வெளிப்பாடாகும். வங்கிக்கட்டமைப்பில் இந்தக் கடன்கள் தாக்கத்தை செலத்தும் என்பதால் வங்கிகள் அபாயத்தினை எதிர்கொண்டுள்ளன. அதுதொடர்பில்ஜனாதிபதிக்கு வங்கிகள் அறிவித்துள்ளன. எனினும், ஜனாதிபதி அந்த விடயத்தினை நிராகரித்து பொருளாதாரத்துக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

பொருளாதாரத்தினை பொறுப்பேற்கும் பொறுப்பு வங்கிகளிடத்தில் இல்லை. திறைசேரி உண்டியல்களிலேயே ஊழியர் சேமலாபநிதியத்தின் 96 சதவீதமான நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதனை நீக்குமாறு தற்போது கூறுகின்றார்கள். அதனை நீக்குவதன் ஊடாக நாட்டில் உள்ள 20 இலட்சம் தனியார் துறையின் ஊழியர்கள் பாதிப்பினை சந்திக் கும் நிலைக்குத் தள்ளப்படவுள்ளார்கள்.

ஊழியர் சேமலாபநிதியத்தின் வைப்புநிதி 20 சதவீதமாகக் குறையும் பட்சத்தில் தொழிற்சங்கத்தினர் வீதிக்கு இறங்கிப் போராடுகவார்கள். அது ஆட்சியாளர்களிற்கும் நன்கு தெரியும். அதனை அடக்குவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தினைக் கொண்டுவருவதற்கு முனைகின்றார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு தொடர்பான விவாதத்தினைத் தொடக்கி வைத்த ஜனாதிபதி, வங்கித்தொழில் துறையிருக்கு பகிரங்மான அச்சுறுத்தலைவிடுத்துள்ளார். வங்கிகளில் பொதுமக்களின் சேமிப்புக்களும், சொத்துக்களுமே காணப்படுகின்றன..

இலங்கை வங்கியை எடுத்துக்கொண்டால் அதன் முதலீட்டில் 53சதவீதமானவை திறைசேரி பத்திரங்களும், திறைசேரி முறிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. தேசிய சேமிப்பு வங்கியை எடுத்துக்கொண்டால் 75 சதவீதமானவை திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மக்கள் வங்கியில்; 38 சதவீதமானவை திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இந் நிலையில், தனது திட்டத்திற்கு இணங்கிச் செயற்படாத வங்கி ஊழியர்களை ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப் பொறுப்பேற்றார். பெப்ரவரி 28ஆம் திகதி இலங்கை மத்தியவங்கியைசூறையாடினார். அப்போது பந்துல குணவர்த்த, இலங்கை மத்திய வங்கியை சூறையாடியுள்ளமையால் அதன் தாக்கம் நாட்டின் பொருளாதாரத்தில் முப்பது ஆண்டுகளுக்கு இருக்கும் என்று கூறினார். அப்படியானால், மத்திய வங்கியில் நிகழ்ந்த சூறையாட்டம் தற்போது பொருளாதாரத்தில் தாக்கத்தினைச் செலுத்தவில்லையா என்பதை பந்துலவிடத்தில் கோருகின்றேன்.

கொரோனா நெருக்கடியான காலத்தில் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதும், நாடு பொருளாதார ரீதியாக முன்னேறும் என்றனர். எனினும், அதன் பின்னர் அன்டிஜன் கொள்ளையே வெளியில் வந்தது. பின்னர் எக்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் நிகழ்ந்தது. அதிலும் இலஞ்சம் வாங்கப்பட்டதால் ஆறு முதல் ஏழு பில்லியன் டொலர்கள் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் அற்றுப்போயுள்ளது. ஆகவே ஊழலும், மோசடிகளும் நிறைந்த நாட்டின் கலாசாரத்தினை மாற்றியமைக்க வேண்டும். அரசியல் கலாசாரத்தினை மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் நாட்டின் பொருளாதாரத்தினை மாற்றியமைக்க முடியாது.- என்றார்.

## பிழையான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரவூப் ஹக்கீம் தனது கேள்வியில், 2019, 2022 காலப் பகுதியில் கொவிட் 19 காரணமாக இறந்தவர்களில் ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்ட உடல்களின் மொத்த எண்ணிக்கை, இறந்தவர்களின் பால், இனம் மற்றும் அப்போதைய ஆளும் தரப்பு ஓட்டமாவடியை தெரிவு செய்தமைக்கான காரணம் என்ன என்று கேள்விகளைத் தொடுத்திருந்தார்.

பதிலளித்த சுகாதார அமைச்சர், 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதிவரை ஓட்டமாவடியில் மொத்தமாக 3 ஆயிரத்து 634 பேர் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 2,225 ஆண்களும் 1,409 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களில் 2,992 இஸ்லாமியர்கள், 237 பௌத்தர்கள் 270 இந்துக்கள் மற்றும் 85 கத்தோலிக்கர்கள் அடங்குகின்றனர்

அத்துடன் கொரோனா தொற்றில் இறந்தவர்களை ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதற்கு கொரோனா ஜனாதிபதி செயலாணி மற்றும் நிபுணர்குழுவின் தீர்மானத்துக்கமையவே மேற்கொள்ளப்பட்டது - என்றார்.

அச்சமயத்தில், வைரஸ் நீரின் ஊடாக பரவும் என்ற கொள்கையை ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரே கொண்டுவந்தார். அதனடிப்படையிலேயே கொரோனா தொற்றில் இறந்த இஸ்லாமியர்கள் மாத்திரமின்றி பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர் மிகவும் தூரப் பிரதேசமான ஓட்டமாவடிக்குஎடுத்துச்சென்று அடக்கம் செய்யப்பட்டனர்.

இது விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படாத, இனவாத அடிப்படையில் பார்க்கப்பட்டது. எந்தவொரு வைரஸும் நீர் ஊடாகப் பரவுவதில்லை என விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இறந்தால் அவருடன் இருக்கும் வைரஸ்களும் இறக்கும் என இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதனால் ஆளும் தரப்பு இந்த விடயத்தில் சில இனவாதிகளால் பிழையாக வழிநடத்தப்பட்டிருப்பதை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனரா என்று ஹக்கீம் மேலதிக கேள்வியைத் தொடுத்தார்.

பதிலளித்த சுகாதார அமைச்சர் கெஹலிய, அந்தக் காலப்பகுதியில் நான் சுகாதார அமைச்சராக இருக்கவில்லை. இருந்தபோதும் கொரோனா நிபுணர்கள் குழு பேரா சிரியர்கள் தங்களின் அறிவைப் பயன்படுத்தி மக்களை பிழையாக வழிநடத்தி இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

இவர்களின் தீர்மானத்துடன் நான் இனங்கவில்லை. ஆனால் அதிகமான பேராசிரியர்கள் உலக சுகாதார அமைப்பின் கருத்து டனே இருந்தார்கள். குறிப்பாக நெத்தகா விதான என்ற பேராசிரியர், அவர்தான் கடந்த காலத்தில் இடம் பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு முன்னணியில் இருந்தார்.

அதனால் இந்த விடயத்தில் ஒரு பிரச்சினை இருக்கிறது. இது வித்தியாசமான முறையிலேயே இடம்பெற்று வருகிறது. அதனால் என்ன நடந்ததென நான் குறிப்பிடாவிட்டால் நான் எனது கடமையில் இருந்து விலகி இருப்பதாக ஆகிவிடும்.

அத்துடன் கொரோனா நிபுணர்குழு மிகவும் பிழையான முறையில் வழிநடத்தி இருந்ததை நானும் ஏற்றுக்கொள்கிறேன். என்றாலும் அதன் பங்காளியாக நான் இருக்கவில்லை - என்றார்.

## வேட்பாளர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடியுள்ளேன். தேர்தல் சட்டங்களுக்கு அமையவே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

குறிப்பாக தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை ஒத்தி வைத்துள்ளதே தவிர இரத்துச் செய்யவில்லை. உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு அடுத்த வாரத் தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதனால் தேர்தல் சட்டத்திற்கமைய செயற்படவேண்டும். குறித்த அரச ஊழியர்கள் தமது தேர்தல் தொகுதியில் அல்லாது அதனை அண்மித்த வேறு பகுதியில் பணிக்குச் செல்லமுடியும்.

உள்ளுராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கும் அறிவுறுத்தலுக்கு அமைய அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அரச சேவையாளர்களை மீண்டும் சேவைக்கு இணைத்துக் கொள்வது தொடர்பில் சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது. உரிய வழிமுறைக்கு அமைய அமைச்சரவை பத்திரம் வெகு விரைவில் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

## லிங்கம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துடைத்தழிக்கப்பட்ட ஆலய விக்கிரகங்களை அதே இடத்தில் நாட்ட வவுனியா நீதிமன்றம் வியாழக்கிழமை கட்டளையிட்டது.

நீதிமன்ற கட்டளைக்கு ஏற்ப நேற்றையதினம் ஆதிலிங்கமும் ஆலயத்தின் ஏனைய விக்கிரகங்களும் நண்பகல் 12 மணிக்கு பிரதிஸ்டை செய்யப்பட்டு மாலையில் கும்பாபிசேக பூசைகள் மற்றும் விசேட பூசைகள் என்பன இரவு 7 மணிவரை இடம்பெற்றன.

விக்கிரகங்கள்பிரதிஸ்டை செய்யப்பட்டபோது பொலிஸார் மற்றும் தொல்லியல்த் திணைக்களத்தினர் அங்கு இருந்தனர்.

இதன்போது ஏற்கனவே இருந்து உடைக்கப்பட்ட சிலைகளையே மீண்டும் வைக்க வேண்டும் எனத் தொல்லியல்த் திணைக்களம் கோரியதனால் சிறிது குழப்பம் ஏற்பட்டபோது சட்டத் தரணிகளின் ஆலோசணை பெறப்பட்டு ஏற்கனவே இருந்த வடிவத்திலான அதே எண்ணிக்கையான சிலைகள் அதே இடங்களில் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டன.

## இந்து - பசுபிக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்த சில ஆண்டுகளில் மாத்திரம் 100 பில்லியன் டொலர்களுக்கு மேல் செலவிடத்திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்புபண்டாரநாயக்க ஞாபகார்த்தசர்வதேசமாநாட்டு மண்டபத்தில்வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2021 2022ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையற்றிய ஜனாதிபதி தெரிவித்தாவது:

உலகில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை இலங்கையால் மட்டும் மாற்ற முடியாது என்பதுதான் பிரச்சினை. நம்மால் மாத்திரம் தனியாக முடியாது. ஏனைய நாடுகளும் இதில் இணைய வேண்டும். இதற்கெல்லாம் போதிய நிதி உள்ளதா என்பதுதான் கேள்வி. குறிப்பாக, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக்குறைப்பதற்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் தேவையான நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

இந்தக் கேள்வியை நாம் கேட்கவேண்டும், ஏனென்றால் உண்மையான பாதிப்புகள் நாம் செய்தவையல்ல. மேற்கு நாடுகள் மற்றும் அவ்வாறு அபிவிருத்தி செய்ய முடிவெடுத்த ஏனைய நாடுகளும்தான் உண்மையான அழிவைச் செய்தன. எனவே, அபிவிருத்தி அடைந்த நாடுகள், தொழில்மயமாக்கல் செயல்முறை, பல போர்கள் மூலம், குறிப்பாக இரண்டு உலகப் போர்கள் மற்றும் வியட்நாம் போர் மூலம் காலநிலை பாதிப்பிற்குப் பங்களித்தன.

அதன் விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டியேற்பட்டுள்ளது. எனவே காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பைத் தணிக்க நிதி தேவை என்று கூறுகிறோம். நம்மிடம் உள்ளதைத் தவிர, எங்களால் திரட்ட முடிந்ததைத் தவிர அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து நிதியைப் பெற வேண்டும்.

காலநிலை மாற்றத்தின் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க எல்லா நிதியையும் எம்மால் செலவழிக்க முடியாது. நாம் கல்விக்கு பணம் செலவழிக்க வேண்டும். மேலும், சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள் என அனைத்திலும் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு போதுமான பணம் எங்களிடம் இல்லை.

உலகின்சிலமுன்னேறிய நாடுகள் தங்களிடமும் போதுமான பணம் இல்லை என்று கூறுகின்றன. என்னைப் பொறுத்தவரை, இது ஒரு பதில் அல்ல. அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இழப்பு மற்றும் சேதக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் பணம் இல்லை என்றால், இந்த முடிவுகளை செயல்படுத்த முடியாத நிலை எற்படும்.

உதாரணமாக, ரஷ்ய - உக்ரைன் போருக்கு செலவழிக்கும் பணத்தை நாம் கருத்தில் கொண்டால், ரஷ்யா ஒரு பக்கம் அதிக நிதியை செலவழிப்பதோடு, மேற்குலகம் மறுபுறம் நிறைய பணத்தை செலவழிக்கிறது. அமெரிக்கா மட்டும் உக்ரைனுக்கு 100 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

மேலும், இந்து - பசுபிக் பிராந்தியத்தில் பதற்றமான சூழ்நிலை உருவாகிவருகிறது. சம்பந்தப்பட்ட நாடுகள் அதிக அளவில் விமானங்கள் மற்றும் போக்குவரத்துக் கப்பல்களைப் பயன்படுத்தி தங்கள் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பெருமளவு பணத்தைச் செலவிடுகின்றன. அடுத்த சில ஆண்டுகளில் மாத்திரம் 100 பில்லியன் டொலர்களுக்கு மேல் இதற்காக செலவிடப்படவுள்ளது.

அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இதற்காக அதிக பணத்தை செலவழிக்கின்றன. இந்த நாடுகளிடம் பணம் இருப்பதால் தான் ஆயுதங்கள் மற்றும் பல்வேறு நோக்கங்களுக்காக இவ்வளவு நிதியை செலவு செய்கின்றன - என்றார்.

## பசுமைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையற்றிய ஜனாதிபதி தெரிவித்தாவது:

நாட்டின் சுற்றாடலைப் பாதுகாப்பதற்குப் பங்களித்ததற்காக விருது பெற்ற அனைவரையும் நான் பாராட்ட வேண்டும். அதற்காகத் தங்களை அர்ப்பணித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்திலும் அதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் போட்டிப் பொருளாதாரத்தின் அவசியத்தையும் அதாவது டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தின் அவசியத்தை பற்றியும் நான் உங்களுக்கு விளக்கியிருக்கிறேன்.

பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்பு தொடங்கும் வேளையில், இலங்கையை பசுமைப் பொருளாதாரமாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை பசுமைப் பொருளாதாரமாக மாறும் போது, அதற்கான புதிய சட்டங்களும் தேவைப்படும். நமது சுற்றாடல் சட்டம் 80களில் நிறைவேற்றப்பட்டதுடன் அதன் பிறகு பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, அடுத்த சில ஆண்டுகளில் புதிய சுற்றாடல் சட்டம் மற்றும் பல புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம், உயிர்ப்புடன் இருப்பவைகள் சட்டம் (Living Entities Act) ஆகியவற்றை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம்.

சிங்கராஜ வனம், ஹோர்டன் சமவெளி, நக்கிள்ஸ் மலைத்தொடர் மற்றும் மகாவலி ஆகிய பகுதிகளை உயிர்ப்புடன் இருப்பவைகள் என்ற வகைக்குக் கீழ் மாற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும், வனப்பாதுகாப்புச் சட்டத்தை கருத்தில் கொண்டு, மீண்டும் காடுகளை உருவாக்கல், முத்துராஜவெல சதுப்புநிலத்தைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் அழகைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்கு புதிய சட்டம் கொண்டு வர வும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே, அடுத்த ஆண்டில் முன்வைக்கப்பட வேண்டிய ஏராளமான சட்டங்களின் வரைவு தயாரிக்கப்பட வேண்டும்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க உலகளாவிய பணிகளில் தனித்துவமான பங்கை வகிக்க இலங்கை எதிர்பார்க்கிறது. அதற்காக காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க நாம் முன்மொழிந்துள்ளோம். காலநிலை மாற்றம் தொடர்பான அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்களை பயிற்றுவித்தல் மற் றும் பட்டப்பின் படிப்பு கற்கைகளையும் இப்பல்கலைக் கழகம் வழங்கும்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல், சுற்றுச்சூழல் மற்றும் பசுமைப் பொருளாதாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து முன்னோக்கிச் செல்வதே எமது ஆலோசனையாகும்.

நம்மைப் போன்ற பல அபிவிருத்தி அடைந்து - வரும் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினை வளப்பற்றாக்குறையாகும். அந்த வளங்களை நாம் எவ்வாறு பெறுவது? இதற்கு பல்வேறு நிதி திட்டங்கள் மற்றும் கருவிகள் உள்ளன. இந்தத் திட்டங்களின் பலனைப் பெற நாம் முயற்சிக்க வேண்டும். நாம் எவ்வாறு நன்மைகளைப் பெறலாம் மற்றும் திட்டங்களுக்கு எவ்வாறு விண்ணப்பிக்கலாம் என்பதை ஒரு நாடாக இலங்கை நிச்சயமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

அடுத்த விடயம், பல்வேறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கடன் சுமையில் உள்ளன. இந்த நிலையில் இருந்து மீள நடவடிக்கை எடுத்த முதல் நாடு இலங்கை ஆகும். ஆனால் அது மட்டும் போதாது. கடன் சுமையில் இருக்கும் பல நாடுகளில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதற்கான வளங்கள் இல்லை.

இது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றது. ஒருபுறம், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த நிதியை செலவிடல் மற்றும் அந்த நிதியை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை இன்னொரு பக்கம், இந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கடன் சுமை. இந்த இரண்டு பிரச்சினைகளும் ஒன்றாக இணைக்கப்பட்ட இரண்டு பிரச்சினைகள் ஆகும்.

எனவே நாம் இது குறித்து குரல் எழுப்புவதோடு கலந்துரையாடுவதும் அவசியம். அடுத்த காலநிலை மாநாட்டில் இந்தப் பிரச்சினையை இலங்கை நிச்சயமாக எழுப்ப எதிர்பார்க்கின்றது. இது நமது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அங்கமாகும்.

காலநிலை மாற்றதால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கு தேவையான வளங்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பெற்றுக் கொடுப்பதில் இலங்கை முன்னணியில் இருப்பதை நான் உறுதிசெய்கிறேன் - என்றார்.

## அமைச்சர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆதரவு தெரிவித்தனர். சர்வதேச நாணய நிதியத் துக்குச் செல்லவேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் கண்ணுக்குப்புலப்படாத சக்தியொன்று அச்செயற்பாட்டை தாமதப்படுத்தியது - என்றார்.

குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிக்கு அப்பால் அடுத்து இரண்டு மூன்று வருடங்களில் காணப்படுகின்ற திட்டம் என்னவென்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் அலிசப்ரி, சர்வதேச கடன் வழங்குநர்களிடத்தில் கடனுக்கான கால எல்லையை பெறுவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்தச் செயற்பாட்டின் ஊடாக 14 பில்லியன் டொலர்கள் கடனைக் குறைத்துக்கொள்ள முடியும். 2027ஆம் ஆண்டு கடனை மீளச் செலுத்தும் நோக்கத்துடன் இந்தச் செயற்பாடு திட்டமிடப்படுகின்றது - என்றார்.

## தடையின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரியும் அமெரிக்க தூதுவரும் எனக்கு எதிரான தடைக்குக் காரணம் என்று நான் கருதுகின்றேன்.

அரச சார்பற்ற அமைப்புகளும் ஏனைய விசாரணையாளர்களும் பதிவுசெய்த விவரங்களை அடிப்படையாக வைத்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எனக்கு எதிராக தடைகளை விதித்துள்ளது.

அரசசார்பற்ற அமைப்புகளின் அறிக்கைகளை வைத்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் என்னை தடை செய்வது வெட்கக்கேடான விடயம். இந்தத் தடை அறிவிப்பின் பின்னால் வேறு ஏதேவொரு நிகழ்ச்சி நிரல் உள்ளது - என்றார்.

## ஆதரிக்காதது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடன்வசதி தொடர்பான தீர்மானத்தில் பங்கேற்றிருக்காத நிலையில் அக்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திய பின்னர், ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஆளும் தரப்பு 200 நாட்களை எடுத்துக்கொண்டது. இந்தக் காலப்பகுதியில் ஆட்சித் தரப்பு நாடாளுமன்றத்தினூடாகவோ அல்லது ஆட்சித் தரப்பு நிதி பற்றிய குழுவின் ஊடாகவோ உரிய உடன்படிக்கை தொடர்பில் கலந்துரையாடவில்லை.

அரச நிதித் துறையை வலுப்படுத்தும் பணியில், வருவாயை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டு, அதற்கு ஏற்ப முக்கிய செலவுக் குறைப்பு குறித்து எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. வருமானத்தை அதிகரிப்பதற்காக, ஏற்கனவே வரி வலையில் சிக்கியுள்ள உழைக்கும் மக்கள் மீதான வரிகளை மேலும் அதிகரிக்க எளிதான வழியை மேற்கொள்ள சர்வதேச நாணய நிதியத்துடன் ஆளும் தரப்பு இணக்கப்பாடொன்றுக்கு வந்துள்ளது. வரி எல்லைகள் குறைக்கப்பட்டு, வரி விகிதங்கள் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளன.

மக்கள் ஏற்கனவே உயர் பணவீக்கம், அதிகரித்து வரும் எரிசக்தி செலவுகள் போன்றவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.. பல ஆண்டுகளாக வரிசெலுத்தாமல் இருக்கும் உயர்வருமானக் குழுக்களின் பலத்தைப் பயன்படுத்தி வரி வலையை விரிவுபடுத்துதல் மற்றும் வரி வசூல் முறைகளுக்கு உத்தரவாதம் அளித்து அர்ப்பணிப்புடன் செயற்படல் காணப்படவில்லை. சொத்து மற்றும் வள பரம்பரைக்கு உரிய வரிகள் மூலம் பணக்காரர்கள் மீது வரிகளை விதிக்கும் பணி 2025 இல் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக சமூகத்தின் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கு நிதியுதவி மூலம் தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படல் வேண்டும். துஷ்பிரயோகம் செய்ய முடியாத முறையின் அறிவியல் ரீதியாக உதவிகளைப் பெறத் தகுதியான மக்களை சரியான முறையில் கண்டறிந்து நிவாரணம் வழங்கு வேண்டியிருந்தாலும் நிவாரணத்தை வழங்குவதற்காக மக்களைத் தெரிவு செய்யும்போது அரசியல்மயப்படுத்தப்பட்ட செயல்முறையை தொடர்ந்தும் பயன்படுத்த ஆளும் தரப்பு முன்மொழிகிறது.

இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் மூலம் நிதிச் சேவைத் துறையில் நிலைத்தன்மையை உறுதி

(03ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரிக்காதது ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
செய்வதற்கான முறைமை காணப்படாமை, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையானது பணப்புழக்கம் மற்றும்மூலதனப்போதுமான அளவு ஆகிய இரண்டிலும் உள்நாட்டுவங்கி அமைப்பை சீர்குலைத்து உள்நாட்டு வங்கித் துறைக்கு தீங்கு விளைவிக்கும். ஒரு உள் நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையானது ஊழியர் ஓய்வூதியநிதியமான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர்நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்போன்றநிதியங்களின் மதிப்பையும் கடுமையாகக் குறைக்கும்..

ஊழலைத் தடுப்பது தொடர்பான பிரச்சினைகளுக்குத்தீர்வுகளைவழங்குவதற்குமுன்முயற்சிஎடுப்பதாக ஜனாதிபதியோ அல்லது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் எந்தவொரு உறுப்பினரோ உறுதியளிக்கவில்லை. உள்ளிட்டகாரணிகளின் அடிப்படையில் ஆட்சியாளர்களுக்கு ஆதரவளிப்பது வீண் என்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடாகும் - என்றுள்ளது.

## ஜஎம்எவ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அளிக்கப்பட்ட அளிக்கப்பட்டதோடு 79 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஆளும் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட 2.9 பில்லியன் டொலர்கள் பெறுமதியான 48 மாத கால நீடிக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான உடன்பாடு மார்ச் 22 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அதனைஅமுலாக்குவதற்காக அனைத்து தரப்பினரினது அனுமதியும்நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு வழங்கப்படவேண்டும் என்பதற்காக கடந்த புதன் கிழமை முதல் மூன்று நாட்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க விவாதத்தினை தொடக்கி வைத்த நிலையில், நேற்று 3ஆவது நாள் விவாதம் நடைபெற்று மாலை 6.20 மணியளவில் முடிவுற்றது.

அதனையடுத்து, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, தீர்மானத்தை சபைஅனுமதிக்கின்றதாஎன்று கேட்டபோது, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவாக்கெடுப்பைக் கோரினார்.

அதனையடுத்து கோரம் மணி ஒலிக்க விடப்பட்டு, வாக்களிப்பு இடம்பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களான அனுர பிரியதரன யாப்பா, துமிந்த திஸாநாயக்க, சுதர்னி பெர்ணாந்துபுள்ளே, பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தநிலையில்எதிராகடலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச தலைமையிலான அணியினர், அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தலைமையிலானதமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்த்து வாக்களித்தன.

இதேவேளை பிரதான எதிர்க்கட்சியானஐக்கியமக்கள் சக்தி வாக்களிப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை. எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் ஏ.எச்.ம்.பௌசி தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பத்துப்பேரும், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும், வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்கவில்லை.

# இலங்கைக்கு தப்ப முயன்றவர் இராமேஸ்வரத்தில் நேற்று கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.29

இந்தியாவின் ராமேஸ்வரத்தை அடுத்துள்ள தனுஷ் கோடி வழியாக படகு மூலம் இலங்கைக்குத் தப்பி வர முயன்றார் எனக் கூறப்படும் முகமது பாரிஸ் என்ற நபரை இராமேஸ்வரம் கியூ பிரிவு பொலிசார் கைது செய்து விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புழல் சிறையில் தடுத்து வைக்கக்கட்டிருந்த இவர் பிணையில் வெளிவந்த நிலையிலேயே தப்பிக்க முயன்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது..

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்இன்றுநீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டு மீண்டும் சிறைக்கு அனுப்பப்படலாம் என தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கான்ஸ்டபிளை தாக்கினார் என நுவரெலியாவில் ஒருவர் கைது!

நுவரெலியா பிரதான பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றுக்குள் நுழைந்து அங்கு அமர்ந்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பகைது செய்யப்பட்ட சந்தேக நபரின் காதலி என கூறப்படும்யுவதியுடன்பொலிஸ் கான்ஸ்டபிள் காதல் கொண்டுள்ளார் என சந்தேக நபர் தவறாகப் புரிந்துகொண்டு இந்தத் தாக்குதலை நடத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ்கான்ஸ்டபிள்நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டத்துக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்!

மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டத்திற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது.

மின்சாரத்துறை நிபுணர்கள் உட்பட பொறுப்பான அமைச்சர் மற்றும்ஆசியஅபிவிருத்திவங்கியின் தலைவருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதற்கமைய, அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு கடன் உதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக் கம் தெரிவித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சுங்கவரி சலுகை அதிகரிப்பாம்

## அமைச்சர் மனுஷ கூறுகிறார்

புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விமான நிலையத்தில் வழங்கப்படும் சுங்கவரி சலுகைக் தொகை, திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்கான சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச் சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைவாக வங்கி முறைமை ஊடாக இலங்கைக்கு சட்டப்பூர்வமாக பணம் அனுப்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அதிகரிக்கப்பட்ட சுங்க வரிச்சலுகை தொகையை பெற தகுதியுடையவர்கள்.

கடந்த ஆண்டு மே மாதம் முதலாம்திகதியில்இருந்துவங்கிமுறை மூலம் நாட்டுக்க அனுப்பப்பட்ட பணத்தின் தொகையை மாத்திரம் கவனத்தில்கொள்ளப்படுவதுடன் ஐந்து பிரிவுகளின் கீழ் இந்த நிவாரணம் வழங்கப்படும்.

2400 – 4799 டொலருக்கும் இடைப்பட்ட தொகையை அனுப்பிய தொழிலாளர்களுக்கு 600 டொலர்களும் , 4800 – 7199 டொலருக்கும் இடைப்பட்ட தொகையை அனுப்பிய தொழிலாளர்களுக்கு 960 டொலர்களும், 7200 – 11 999 டொலருக்கும் இடைப்பட்ட தொகையைஅனுப்பியவர்களுக்கு , 1440 டொலர் மேலதிக சுங்கவரி நிவாரணம் வழங்கப்படும்.

12 000 – 23 999க்கும் மேற்பட்ட டொலர்களை அனுப்பிய தொழிலாளர்களுக்கு 2400 டொலர்சுங்கவரிசலுகையையும், 24 000 அல்லது அதற்கு மேற்பட்ட டொலர்களை அனுப்பிய தொழிலாளர்களுக்கு 4800 டொலருக்கான மேலதிக சுங்க வரிசலுகையைப்பெற்றுக்கொள் முடியும்.






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் விருப்பும் யதார்த்தமும்

ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவரானதும் தடாலடியாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்தார். அதையடுத்து பிக்குகள் கிளர்ந்தெழுந்தனர். வழமைபோன்று விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில, சரத் வீரசேகர ஆகியோர் இதற்கெதிராகக் கடுமையான கருத்துக்களைத் தெரிவித்தனர். தமிழ்த் தரப்பிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதனைக் கடுமையாக எதிர்த்தது. இந்த எதிர்ப்புக்கள் காரணமோ இல்லையோ அதன் பின்னர் 13ஆவது திருத்தம் தொடர்பில் அரசுத் தலைவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது ஒன்றும் புதியதல்ல. அரசுத் தலைவரின் வழக்கமான பாணிதான். எல்லாவற்றையும் ஆரவாரப்படுத்திவிட்டு, தனக்குப் பாதகமானது என்று கருதும் விடயங்களில் மட்டும் மெல்லப் பதுங்கிக்கொள்வது அவரது அரசியல் வரலாறு முழுவதும் உள்ளவைகள்தான். அவர் எதிர்ப்புக்களுக்கு அஞ்சுகிற ஆள் அல்ல. ஆனால் எதிர்ப்புக்களைக் கிளப்பிவிட்டு தேவைப்படும்போது அஞ்சுவதாகக் காட்டிக்கொள்பவர். 13 விடயத்திலும் இப்போது அதுதான் நடக்கிறது.

இந்த நிலையில்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களை வெள்ளிக்கிழமை அழைத்துச் சந்தித்துப் பேசியிருக்கிறார் இந்திய உயர் ஆணையர் கோபால் பாக்லே. இந்தச் சந்திப்பில் ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். இவை அனைத்தும் இப்போதைக்கு இந்தியாவால் அரவணைக்கப்பட்டுவரும் தரப்புக்கள். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதை ஒரு தீவிர கோரிக்கையாக இந்தத் தரப்புக்களே முன்வைத்தன.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை இந்தியாவிடம் முன்வைக்கவேண்டும் என்று ரெலோ ஒரு முன்மொழிவைக் கொண்டுவந்தபோது, அதனை தமது பல கோரிக்கைகளுக்குள் ஒன்றாக, அதுவும் சமஷ்டிதான் தீர்வு அதற்கு முன்னதாக 13ஐ நடைமுறைப்படுத்தலாம் என்பதாக தமிழ் அரசுக் கட்சி மாற்றியதாலோ என்னவோ இந்தச் சந்திப்பில் அந்தக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. தமிழ் அரசுக் கட்சி இன்றி நடந்த இந்தச் சந்திப்பின் பின்னர் இந்தியத் தூதரகம் வெளியிட்ட தகவலில் அரச மைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும் என்ற உறுதிப்பாட்டை இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் கோபால் பாக்லே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

13ஐ ஆரவாரமாகத் தொடங்கியபோதும் அதற்கெதிர்ப்பு வந்ததாகக் காட்டி அது தொடர்பில் தற்போது அமைதி காத்துவரும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த விடயத்தை ஞாபகப்படுத்த இந்தியா விரும்புகின்றது. அவர் வாக்குறுதியளித்தபடி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதை அவருக்கு நினைவூட்டுவதற்காகவே, 13க்கு ஆதரவான, தன்னோடு இணைந்து இந்த விடயத்தில் நம்பிக்கையாக நடந்துகொள்ளக்கூடிய தரப்புக்களைச் சந்தித்து, இது தொடர்பில் தனது வலியுறுத்தல் தொடரும் எனக் கூறியிருக்கிறது இந்தியா.

ரணில் நுட்பமானவர் என்பதால் இந்தச் செய்தியைச் சரியாகக் கிரகித்துக்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்தியா எதிர்பார்ப்பதைப் போன்று அவர் இந்த விடயத்தில் வேகமாகச் செயற்படுவார் என்று எதிர்பார்க்க முடியாது. விரைவில் அவர் இது தொடர்பில் மீண்டும் பேசக் கூடும். மாகாண சபைத் தேர்தலைக் குறைந்தது அடுத்த தடவையாவது நடத்துவது போன்ற நகர்வுகளில் இறக்கக்கூடும். ஆனால் அவரது இந்த ஆட்சிக் காலத்திற்குள் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை அவர் செய்வார் என்று எதிர்பார்க்கவே முடியாது.

# சர்வதேச நாணய நிதியத்தினது அனைத்து நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தோம்

## சுசில் பிரேம ஜயந்த அடித்துக் கூறுகின்றார்



எந்த வங்கிகளிலும் எந்த நாட்டிலும் கைம்மாற்று முறையிலாவது கடன் பெற முடியாத ஒரு நிலையிலேயே சர்வதேச நாணய நிதியம் எமக்குக் கை கொடுத்தது.

சர்வதேச நிதியத்தின் அத்தனை நிபந்தனைகளையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில்லை எனினும் நடைமுறைப்படுத்த வேண்டியவற்றை சட்டத்தைக் கொண்டு வந்து அரசு நடைமுறைப்படுத்தும் என சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின்கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கான தீர்மானம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

சர்வதேச நாணய நிதியம் என்பது அமெரிக்காவின் ஒரு வங்கியல்ல. அவ்வாறு எண்ணிக் கொண்டே பலரும் கருத்துக் களைத் தெரிவித்து வருகின் றனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 196 நாடுகளில் பெருமளவு நாடுகள் அதில் அங்கத்துவம் வகிக்கின்றன. அது ஒரு நிதியம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த நிதியத்தின் பெரும் பகுதியை அமெரிக்கா கொண்டுள்ளது. அதற்கு அடுத்ததாக ஜப்பான், சீனா போன்ற நாடுகள் உள்ளன.

நாம் சீனாவிடமும் 7 பில்லியன் டொலருக்கும் அதிகமான இருதரப்பு கடனைப் பெற்றுக் கொண்டுள்ளோம். அது பிரத்தியேகமானது.

பெருமளவு நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் நிதியத்திடமே எமது பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக நாம் கடன் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டுள்ளோம்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி வேறு காலங்களை விட வித்தியாசமானது.

அந்த வகையில் இதற்கு முதல் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றதற்கும் இம்முறை சென்றதற்குமிடையில் வித்தியாசம் காணப்படுகிறது. இப்போது நாம் அந்த நிதியத்திடம் சென்றது தவறு என்றால் அப்போது சென்றதும் தவறுதான்.

நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் 16 தடவைகள் சென்றுள்ளோம்.

இம்முறை நாம் கண்டிப்பாக செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏனெனில் வேறு எந்த நாடுகளும் எமக்கு கடன் தராத நிலைமையே காணப்பட்டது.

கொடுத்த கடன்கள் அத்தனையையும் அந்த நாடுகள் நிறுத்தின. 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாடு வங்குரோத்து அடைந்தது. அப்போது அதற்கு ஆதரவாக பேசிய, அமைச்சரவையில் இருந்தவர்களே இப்போது பல்வேறு எதிர் கருத்துக்களை முன் வைக்கின்றனர். நாம் அப்போது அமைச்சரவையில் இருக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்கின்றமை தொடர்பில் தர்க்கங்கள் காணப்படுகின்றன. அது வேறு விடயம். எமக்கும் சில மாற்றுக் கருத்துக்கள் உள்ளன.

எனினும் நான் வங்கியொன்றின் வாடிக்கையாளர் என்றால் எனக்கு நிதி நெருக்கடி இருக்குமானால் நான் அந்த வங்கியிடம் சென்றுதான் கடன் கேட்க வேண்டும். அவ்வாறு வங்கி கடன் தரும்போது நான் விரும்பிய விதத்தில் அந்த கடனை வங்கி ஒருபோதும் கொடுக்காது.

மாறாக அதனை என்னால் மீள செலுத்த முடியுமா என்பதை கட்டாயம் பார்க்கும். நான் எவ்வாறு கடன் பட்டேன் என்பதையும் சாதாரண பொருளாதார நிலையில் எவ்வாறு அதனை தீர்த்துக்கொள்ள முடியும் என்றும் பார்க்கும்.

அந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்தில் நாம் அங்கத்தவர்கள். இதற்கு முன்னரும் அங்கு சென்றுள்ளோம்.

நாட்டுக்கு கிடைத்த அனைத்து கடன்களும் நிறுத்தப்பட்ட நிலையில் அந்நிய செலாவணி வருமானம் மிகவும் வீழ்ச்சியடைந்த நிலையில் மத்திய வங்கி மற்றும் வங்கிகள் வெளிவர்த்தக நிறுவனங்களிடம் அதிக வட்டிக்கு கடன் பெறும் நிலையே காணப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவலாம். எனினும் எந்த வங்கிகளிலும் எந்த நாட்டிலும் கைம்மாற்று முறையிலாவது கடன் பெற முடியாத ஒரு நிலையிலேயே சர்வதேச நாணய நிதியம் எமக்குக் கை கொடுத்தது.

அவ்வாறு அந்த நிதியம் வழங்கும் 2.9 பில்லியன் டொலர் நிதி கிடைத்துள்ள நிலையில் இப்போது எமக்கு கடன் பற்றுப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு நிபந்தனைதான் ஊழல் மோசடிகளை நிறுத்துவது. அந்த சட்டம் மூலம் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# ஜனாதிபதியாகப் பதவியேற்க மொட்டுவில் பலருக்குத் தகுதி

## அக்கட்சி எம்.பி. சந்திரசேன கூறுகின்றார்




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ஜனாதிபதியாகப் பதவியேற்கப் பலருக்குத் தகுதி உண்டு. எனினும், அடுத்த தேர்தலில் எமது கட்சி எந்த வேட்பாளரைக் களமிறக்குகின்றதோ அவருக்கே நான் ஆதரவு வழங்குவேன்.

- இவ்வாறு மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, கட்சி சார்பில் வேட்பாளரைக் களமிறக்கும் அல்லது பொது வேட்பாளரைக் களமிறக்கும். இது தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை.

எனினும், எமது கட்சி எந்த வேட்பாளரைக் களமிறக்கின்றதோ அவருக்கே நான் ஆதரவு வழங்குவேன். கட்சியின் தீர்மானத்தை மீறி நாம் செயற்பட முடியாது. - என்றார். (02)

# யாழ்ப்பாணம் புத்தூர் மருத்துவ நிலையத்தில் தாக்குதல் நடத்திய மூவர் விளக்க மறியலில்!

யாழ்ப்பாணம், புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன், வைத்தியரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் மூவர் அச்சுவேலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, கடந்த வியாழக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

கடந்த 10 ஆம் திகதி புத்தூர் சந்தியில் உள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்துக்கு அருகில் தண்ணீர்ப் பந்தல் அமைத்த இளைஞர்கள் ஒலிபெருக்கியை அதிக சத்தத்தில் ஒலிக்கவிட்டுள்ளனர்.

இதனையடுத்து, தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்றிருந்த வைத்தியரொருவர் ஒலிபெருக்கியின் சத்தத்தை குறைக்கும்படி கேட்டுள்ளார்.

அதன்போது வைத்தியருக்கும் இளைஞர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்படவே, வைத்தியர் அங்கிருந்து புறப்பட்டு, மருத்துவ நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

அதன் பின்னர், மருத்துவ பராமரிப்பு நிலையத்துக்குள் நுழைந்த சிலர் தாக்குதல் நடத்தியதுடன் வைத்தியருக்கு அச்சுறுத்தலும் விடுத்ததாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த வைத்தியர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற தினமே வைத்தியர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதிலும், பொலிஸார் விசாரணைகளில் அசமந்தப்போக்கு காட்டியதால், வைத்தியசாலை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி கடமை புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தனர்.

இந்நிலையிலேயே பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தி தாக்குதலோடு தொடர்புடைய மூவரை கைதுசெய்துள்ளனர்.

கைதான மூவரிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் மூவரும் ஆஜர்படுத்தப்பட்டபோது, சந்தேக நபர்களை எதிர்வரும் மே 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# வசந்த கரணாகொடவிற்கு எதிரான அமெரிக்க தடைக்கு ரஸ்யா அதிருப்தி!

இலங்கை உட்பட இறைமையுள்ள எந்த நாட்டின் உள்விவகாரங்களிலும் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கைக்கான ரஸ்ய தூதுவர் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் தங்கள் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் மேற்குலகில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பேசுகின்றோம், அவர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. அவ்வாறான நிலை காணப்படுகின்ற போதிலும் இலங்கை போன்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

நீங்கள் எதனை செய்ய வேண்டும் எதனை செய்யக் கூடாது என உங்களுக்கு பாடம் நடத்துவதற்கு - இலங்கைக்கு எவருக்கும் உரிமை இல்லை - இது உங்களின் உள்விவகாரம் என ரஸ்ய தூதுவர் தெரிவித்துள்ளார்.

நீங்கள் கண்ணாடி வீட்டிலிருந்துகொண்டு கல் எறியக்கூடாது என ஆங்கிலத்தில் தெரிவிப்பார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 24 . 04 . 1947

விண்ணில் 28 . 04 . 2023



கொம்மந்துறை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## இரத்தினம் தவராசா

கொம்மந்துறை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தவராசா அவர்கள் 28.04.2023 (வெள்ளிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் அன்னம்மா தம்பதியினரின் இளைய மகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் மகாலிங்கம், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலீபன், கேசவன், தீபா, கேமா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிதாஸன், செந்தில்குமரன், றோயனா, ராஜ்குமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜலோன், வரோதயன், கஜானா, சபினாஷ், சஷ்திகா, கௌசிகன், கௌதமன், கௌசல்யன், கௌரீசன், கரீஸ்மன், தக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.04.2023 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10 மணியளவில் கொம்மாந்துறை வல்வெட்டித்துறையில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொம்மாந்துறை
வல்வெட்டித்துறை

தகவல்
குடும்பத்தினர்
077 607 0680
076 546 7631

காலைக்கதிர் Kalaikkathir

# பேர்ள் விவகாரத்தில் மக்களுக்கு உண்மையை பகிரங்கப்படுத்த தெரிவுக்குழுவை நியமிக்குக

## நீதியமைச்சர் விஜயதாஸ வலியுறுத்து



எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்ட ஈடு பெற்றுக்கொள்ள வழக்கு தாக்கல் செய்வதை தடுக்க பலம் வாய்ந்த தரப்பினர் தொடர்ந்து பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

நாட்டு மக்களுக்கு உண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும். நியூ டைமன், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபியுங்கள் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில்விசேடகூற்றைமுன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இதன்போது அமைச்சர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான நியூ டைமன் கப்பல் மற்றும் கடலில் மூழ்கிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கும், நாட்டு மக்களுக்கும் உண்மையை குறிப்பிடுவேன். எவருக்கும் அச்சமடையப் போவதில்லை. எந்த விடயத்தையும் நான் தவறாகக் குறிப்பிடவில்லை. இரண்டு கப்பல்கள் தொடர்பில் நான் குறிப்பிட்ட விடயத்தை தவறாக புரிந்துகொண்டதற்கு என்னால் பொறுப்பேற்க முடியாது.

எம்.பி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் 2021ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி கொழும்பு துறை முகத்தை அண்மித்த கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்தநிலையில், தீவிபத்துக்கு உள்ளானது. அதற்கு முன்னர் 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் கிழக்கு கடற்பரப்பில் நியூ டைமன் என்ற கப்பல் தீ விபத்துக்கு உள்ளானது. இந்த கப்பலாலும் கடல் வளங்கள் மாசடைந்தது.

நியூ டைமன் கப்பல் தீ விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்ட ஈட்டினை பெற்றுக்கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்வதில் தாமதம் காணப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரியும், நானும் வழக்குத் தாக்கல் விவகாரத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஆலோசனைகளை வழங்கினோம். காலம் கடந்த பின்னணியில் தான் நட்ட ஈடு பெற்றுக்கொள்வதற்கு கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

2021ஆம் ஆண்டு கொழும்பு துறைமுக கடற்பரப்பில் விபத்துக்குள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் தாமதம் காணப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை உட்பட உரிய தரப்பினருக்கு கப்பல் விபத்து, வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்களை அறிக்கையாக செப்ரெம்பர் (கடந்த) மாதத்துக்குள் சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்டேன்.

40 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய ஆய்வுக் குழுவினர் ‘மதிப்பீட்டு ஆய்வு அறிக்கை’யை கடந்த ஜனவரி மாதம் நடுப்பகுதியில் என்னிடம் சமர்ப்பித்தார்கள்.

அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதற்கு பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஊடாக வழக்குத் தாக்கல் தொடர்பான விடயங்கள் மற்றும் தரப்பினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை அந்த தடைகளில் ஒன்று என குறிப்பிட வேண்டும். இதனால் சட்டமா அதிபர் திணைக்களம் நெருக்கடிக்குள்ளானது.

இவ்வாறான பின்னணியில் தான் நியூ டைமன் கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான அறிக்கை கிடைக்கப் பெற்றது. முழுமையான மதிப்பீடு இல்லாமல் ஏன் கப்பலை வெளியேற்றினீர்கள் என கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னாள் தலைவரிடம் வினவியபோது ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய, விடுவித்ததாக அவர் தெரிவித்தார். அதற்கான மின்னஞ்சல் செய்தியையும் அவர் காண்பித்தார்.

வெளிவிவகாரத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயநாத் கொலம்பகே நியூ டைமன் கப்பலை வெளியேற்றுமாறு கடற்படை தளபதி மற்றும் கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை ஆகியோருக்கு மின்னஞ்சல் செய்தியினூடாக அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நான் வினவியபோது அவர் ‘ஜனாதிபதி கடற்படை தளபதிக்கு உத்தரவு ஒன்றை வழங்க வேண்டுமாயின், அதனை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக பிறப்பிக்க வேண்டும் அல்லது ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக பிறப்பிக்க வேண்டும்’ என்றார்.

நியூ டைமன் கப்பல் விபத்தின்போது நீங்கள் தான் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் (நாலக கொடஹேவாவை நோக்கி); கப்பலால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை முழுமையாக மதிப்பிடாமல் கப்பலை வெளியேற்றாமல் நீங்கள் தடுத்திருக்க வேண்டும். முழுமையான மதிப்பீடு இல்லாமல் கப்பலை வெளியேற்ற வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியதை தொடர்ந்து அப்போதைய சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, ‘நியூ டைமன் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை முழுமையாக மதிப்பீடு செய்யாமல், கப்பலை நாட்டின் கடற்பரப்பில் இருந்து வெளியேற்ற வேண்டாம்’ என உரிய தரப்பினருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலை பொருட்படுத்தாமல் கப்பலை விடுவித்ததால் வழக்கு தாக்கல் செய்வது தாமதப்படுத்தப்பட்டது. இறுதியில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கப்பல் வெளியேறியுள்ளதால் வழக்கு தாக்கல் மற்றும் விசாரணைகள் தொடர்பில் அழைப்பு விடுக்க முடியாத நிலை உள்ளது.

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் நட்ட ஈடு பெற்றுக்கொள்வதற்கு வழக்கு தாக்கல் செய்வதை தடுக்க பலம் வாய்ந்த தரப்பினர் பாரிய முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர்.

நியூ டைமன் கப்பல் மற்றும் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, நாடாளுமன்றம் ஊடாக தெரிவுக்குழுவை நியமித்து நாட்டு மக்களுக்கு உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும். - என்றார்.

# தற்போதுள்ள மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மிக பழையது என்கிறார் சீனதூதர்

அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய, மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நாட்டில் ஸ்தாபிக்கவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

சீனமுதலீடாகநாளாந்தம் 4 தொன் மசகு எண்ணெய் சுத்திகரிக்கக்கூடிய அதிநவீன தொழில்நுட்பத்துடனான சுத்திகரிப்பு மத்திய நிலையம் ஒன்று நாட்டில் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக இலங்கைக்கான சீன தூதுவர் ச்சீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

மல்வத்த மகாநாயக்கர்களை சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துவெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போதுள்ள மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மிக பழைமையானது என சீன தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய சுத்திகரிப்பு நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர், நாட்டின் எரிபொருள் விநியோகத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் 120 முதல் 140 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடு சீனாவினால் நாட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஊடாக பல புதிய தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறக்கூடும் எனவும் இலங்கைக்கான சீனதூதுவர் ச்சீசென்ஹொங் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனவரியில் மொத்தம் ஒரு லட்சத்து இரண்டாயிரத்து 545 சுற்றுலாப் பயணிகளும், பெப்ரவரியில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 639 பேரும் கடந்த மாதம் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 495 சுற்றுலாப்பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளின்படி, ஏப்ரல் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 87 ஆயிரத்து 316 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதற்கிடையில், ஏப்ரல் மாதத்தில், இந்தியாவில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள்வருகைதந்துள்ளனர்.

இதற்கமைய, ஏப்ரல் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 15 ஆயிரத்து 282 இந்தியர்கள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

அத்துடன், ரஷ்யாவிலிருந்து 12 ஆயிரத்து 729 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 7 ஆயிரத்து 625 பேரும், ஜேர்மனியிலிருந்து 6 ஆயிரத்து 734 பேரும், பிரான்ஸிலிருந்து 5 ஆயிரத்து 25 பேரும், ஆஸ்திரேலியாவிலிருந்து 4 ஆயிரத்து 368 பேரும், சீனாவிலிருந்து 3 ஆயிரத்து 767 பேரும், அமெரிக்காவிலிருந்து 2 ஆயிரத்து 989 பேரும் இந்த மாதம் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 லட்சத்து 22 ஆயிரத்து 995 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.




OKAYA
ELECTRIC VEHICLES

dsl
We lead the way...!

பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

The inEVitable
Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




**1. உரலார் கேள்வி:-** தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கு சுமந்திரன், சிறீதரன், சீ.வி.கே. சிவஞானம் ஆகிய மூவரும் வெளிப்படையாகப் போட்டியிட முயல்கிறார்கள் என்று 'மாவை' சொல்லியிருப்பதைப் பார்த்தீர்களா. அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** ஒன்று மட்டும் எனக்குபுரியமாட்டேன் என்கிறது. ஜனநாயக அமைப்புக்குள் இயங்கும் ஒரு கட்சிக்குள் இருக்கும் பதவிகள், இன்னாருக்கு மட்டும் என்று உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல. நமது கூட்டமைப்புக்குள் அண்மைக் காலமாய் அப்படி ஒரு நிலைப்பாடு வந்து கொண்டிருக்கிறது. அங்கு, ஒருமுறை நாடாளுமன்றத் தேர்தலில் நின்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், பிறகு அப்பதவி தொடர்ந்தும் தனக்கே உரியது என்றாற் போல நினைக்கத் தொடங்கிவிடுகிறார்.

அதுமட்டுமல்லாமல் தம் காலத்திற்குப் பிறகு, தம் சந்ததியினருக்கும் அப்பதவி வழங்கப்படவேண்டும் என்பதாயும் அவர்களுள் சிலர் விரும்புவதாய்த் தெரிகிறது. இது மிகப்பெரிய தவறாகும். 'மாவை' அவர்கள் மேற்சொன்ன கருத்தை ஒரு முறைப்பாடாய்ச் சொல்லுகிறாரா? அல்லது யதார்த்தமாய்ச் சொல்கிறாரா? என்று தெரியவில்லை. அவர் சொன்ன மூவரும் தலைவர் பதவிக்குப் போட்டியிடத் தக்கவர்களே.

சுமந்திரன் கட்சிக்குள் பிந்தி வந்திருந்தாலும், அறிவாற்றலாலும், செயற்றிறனாலும் மற்றவர்களை முந்திச் செயற்படுகிறார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அது மட்டுமல்லாமல் காலாவதியாகிவிட்ட கூட்டமைப்பின் மதிப்புக்குரிய பொம்மைத் தலைவரின் ஆதரவையும் அவர் பெற்றிருக்கிறார். போருக்குப் பின்னான நம் இனத்தின் அரசியல் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து வருகிறார். எனவே அவருக்குத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் உரிமை முழுமையாக இருக்கிறது என்றே நினைக்கிறேன்.

மக்கள் செல்வாக்கில் சிறீதரன் இன்று கட்சிக்குள் முதன்மை இடம் பெற்றிருக்கிறார் என்பதைக் கடந்த தேர்தல்கள் நிரூபித்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் போராட்டக்காலத்திலிருந்து நம் இனப்பிரச்சினைக்கு முகம் கொடுத்து நின்றவர் என்ற தகுதியும் அவருக்கு உண்டு. அவரும் இனம் சார்ந்த பிரச்சினைகள் எழும் போதெல்லாம் நாடாளுமன்றத்தில் துணிந்து குரல் கொடுத்து வருகின்றார். இத் தகுதிகளை வைத்து அவரும் தாராளமாகத் தலைவர் பதவிக்கான போட்டியில் துணிந்து நிற்கலாம்.

சீ.வி.கே. சிவஞானம் அவர்கள் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர். ஈழப்போர் தொடங்கிய காலம் தொட்டு, இன்று வரை ஏதோ வகையில் இனப்பிரச்சினைத்தீர்வு முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்து கொண்டேயிருக்கிறார். யாழ். மாநகரசபை ஆணையாளராக அவர் இருந்த போது, போர்க்காலச் சூழலில் அவர் செயற்பட்டவிதமும் அக்காலத்தில் அவர் காட்டிய துணிவும் அவரது தனித்தகுதிகள். ஜே.ஆரின் அரசாங்கம் இருந்த போது இணைந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களின் முதலமைச்சராக, புலிகளால் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற தகுதியும் அவருக்கு உண்டு. புலிகளுக்கும் இந்தியாவிற்குமான பகை தொடங்கிய காலத்தில், அவ்விரு பகுதிக்கும் சமரசம் செய்யத் தனித்து முயன்றவர் அவர். அது மட்டுமல்லாமல் போராட்டக் காலத்தில் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு உயிர் தப்பியவர். இத்தகைய தகுதிகள் இருப்பதால் அவரும் தலைவர் பதவிக்குத் தாராளமாகப் போட்டியிடலாம்.

என்னைக் கேட்டால் மூத்த தலைவர்கள் இனி, பகையுணர்வின்றி, தாம் பின்னின்று கொண்டு இளையவர்களை வழிநடத்துவதுதான் உகந்தது என்பேன். முதியவர்களிடம் அனுபவ அறிவுண்டு. இளையவர்களிடம் இயங்கும் ஆற்றல் உண்டு. அனுபவமும், ஆற்றலும் ஒன்றிணைகின்ற பொழுதுதான் நம் இனம் உயர்வடையும்.

**சல்லடையாரின் சலிப்பு * கூட்டமைப்பினர்க்கு உரிய நல்ல 'அட்வைஸ்'. ஆனால் அது எடுபடுமா?**

**2. உரலார் கேள்வி:-** புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வடக்குக் கிழக்கில் நடத்தப்பட்ட ஹர்த்தாலால் என்ன பயன் விளையப் போகிறது? அம் முயற்சி, நமது பொருளாதாரத்தை நாமே விழுத்தும் செயலாகாதா?

**உலக்கையார் பதில் :-** நீங்கள் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. வடக்குக் கிழக்கில் நிகழ்ந்த ஹர்த்தாலின்போது நிகழ்த்தப்பட்ட முழுக் கடையடைப்பால், நம் பொருளாதாரத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் அதே நேரத்தில், மற்றொன்றையும் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. ஒரு பெரும்பான்மைப் பேரினவாத அரச நிர்வாகத்தின் கீழ் அகப்பட்டிருக்கும் சிறுபான்மை இனத்தவர்கள், தமக்கு எதிராக அரசினால் திட்டமிட்டுச் செய்யப்படும் சதிகளுக்கு வேறு எப்படித்தான் தமது எதிர்ப்பைக் காட்டுவது? என்ற கேள்வியையும் நாம் நிராகரிப்பதற்கில்லை.

நம் தலைவர்கள் தமது பதவிப்பற்றை விடத் துணிவார்களானால், இத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில், தமது நாடாளுமன்றப் பதவிகளை ஒருமித்துத் துறந்து உலகிற்கு நம் இன எதிர்ப்பைக் காட்டமுடியும். அதெல்லாம் இனிக் கனவில்த்தான் சாத்தியம் என்று நினைக்கிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு * பதவியை யாவது விடுவதாவது.... ஹி..ஹி..**

**3. உரலார் கேள்வி:-** சில பௌத்த பிக்குமார்களும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்க்கிறார்களாமே?

**உலக்கையார் பதில்:-** எங்கோ இடிக்கிறதே! வரப்போகும் இந்தச் சட்டத்தால், அநியாயத்திற்குச் சார்பாக, தமது துறவைப் பயன்படுத்திக் கொடி பிடித்து இயங்கும் தமது சுதந்திரத்திற்கும் கட்டுப்பாடு வரும் என்று நினைக்கிறார்களோ என்னவோ? அறம் சார்ந்துதான் அவர்கள் தமது எதிர்ப்பைக் காட்டுகிறார்கள் என்றால் அவர்கள் துறவுக்கும், நம் நாட்டிற்கும் மதிப்பு வரப் போவது நிச்சயம்.

**சல்லடையாரின் சலிப்பு * 'துறந்தார் பெருமை துணைக்கூறின்...'?**

**4. உரலார் கேள்வி:-** வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் பொது மக்கள் சென்று வழிபாடு செய்வதை எவரும் தடுக்கக்கூடாது என்ற நீதிபதியின் தீர்ப்புப்பற்றி?

**உலக்கையார் பதில்:-** துணிந்த அவரது செயற்பாட்டைப் பாராட்டாதார் எவரும் இல்லை. ஒரு சாதாரண உரிமையை நிலைநாட்டக்கூட நீதிமன்றம் வரை செல்லவேண்டிய அபாக்கிய நிலையில்த் தான் நம் தமிழ்மக்கள் இருக்கிறார்கள். இதில் மறுக்கப்பட்டது நம் வழிபாட்டுரிமை அல்ல வாழ்வுரிமை. அரசு தரக்கூடிய ஆதரவை நிராகரித்ததோடல்லாமல் அதனால் வரக்கூடிய இழப்புக்களையும் ஏற்கத் துணிந்த நீதிபதியும் ஒரு போராளிதான். யார் யாரோ எது எதற்கோ போராட, இந்த மனிதர் சத்தியத்தின் வெற்றிக்காய்ப் போராடியிருக்கிறார். வாழ்த்துவோம்!

**சல்லடையாரின் சலிப்பு * சத்தியத்தின் தீர்ப்பு அயோக்கியர்களிடம் எடுபடுமா?**

**5. உரலார் கேள்வி:-** பேரினவாதிகள் நமது தமிழ்மண்ணைப் பலவிதத்தாலும் ஆக்கிரமிப்புச்செய்யத்தொடங்கியிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்குப் பொதுமக்கள் என்ன செய்யலாம்?

**உலக்கையார் பதில்:-** செயல்திறனுள்ள நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுக்க முயற்சிக்கலாம்.

**சல்லடையாரின் சலிப்பு * 'யார் அங்கே? நல்ல தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு பூதக் கண்ணாடியைக் கொண்டுவா'**

**6. உரலார் கேள்வி:-** ஜனாதிபதியின் பொருளாதார மீட்பு முயற்சிகள் வெற்றி பெறும் என்று நினைக்கிறீர்களா?

**உலக்கையார் பதில்:-** வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறேன்!

**சல்லடையாரின் சலிப்பு * 'எண்ணியர் எண்ணியாங்கு எய்துவர்'**

**7. உரலார் கேள்வி:-** யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் சத்தியமூர்த்திக்கும் வர்ம நாடி வைத்தியர் ரகுராமனுக்கும் இடையில் நடைபெற்று வரும் மோதல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** இதுபற்றி விரிவாய்ச் சொல்லும் ஆற்றல் எனக்கில்லை என்று நினைக்கிறேன். ஆங்கில வைத்திய முறையில் பல பிழைகள் நடந்து கொண்டிருப்பதாக ரகுராமன் குற்றம் சாட்டுகிறார். அவர் சொல்லும் விடயங்களை முற்று முழுதுமாய் நிராகரிக்க முடியாதுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையே.

ரகுராமனை மனநல மருத்துவமனைக்கு அனுப்பவேண்டும் என்று தனது முகநூலில் பதிவிட்ட சத்தியமூர்த்தியின் செயல் சற்று மிகையாகவே தோன்றுகிறது. நிதானமும் செயற்திறனும் உள்ள அவர், ஏன் அவசரப்பட்டு இப்படி வார்த்தைகளை விட்டார் என்று தெரியவில்லை? அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டிய விடயத்தை உணர்வுபூர்வப் பகையாக்குவது பொருத்தமற்ற செயல் என்றே நினைக்கிறேன்.

ரகுராமனிடம் சிகிச்சை பெற்று நலமடைந்ததாக பல நோயாளிகள் சொல்லும் பதிவுகள் வெளிவந்திருக்கின்றன. அதை மட்டும் வைத்து அவரது கருத்தை முழுமையாய் ஏற்க முடியாது என்பது நிஜம்.

தமிழ்நாட்டுத் தொலைக்காட்சிச் 'சனல்'களில் பல, நாட்டு வைத்தியர்கள் தங்களது வைத்திய முறையால் மாற்ற முடியாத பல நோய்களை மாற்றுவதாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அங்கும் பல நோயாளிகள் அந்த வைத்தியர்களின் மருத்துவத்தால் தாம் சுகமடைந்து வருவதாகச் சொல்லி வருகிறார்கள். அவற்றின் உண்மைத்தன்மை ஐயத்திற்குரியதாகவே இருக்கிறது.

அதனால் சத்தியமூர்த்தி அவர்கள் ஒரு வைத்தியர் குழுவை அனுப்பி, ரகுராமன் சொல்லும் வைத்திய முறை பற்றி ஆராய்ந்து அறிந்திருக்கவேண்டும். தப்பித்தவறி அவர் சொல்லும் வைத்தியமுறை உண்மையானால், அதனால் பலர் நன்மையடையக் கூடுமே.

அதேபோல ரகுராமன் அவர்களும் சர்ச்சை என்று வந்த பிறகு ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி தன் வைத்தியமுறையின் நிஜத்தன்மையை அவர்கள் முன் நிரூபித்துக் காட்டியிருக்கலாம்.

அதுபோக, ஆங்கிலவைத்தியத்தைவிட்டால் வேறு வைத்தியமுறையே இல்லை என்று நினைக்கும் கருத்திலும் எனக்கு உடன்பாடில்லை. நம் இனத்திலும் பல புதுப்புது வைத்தியமுறைகள் இருந்ததையும் நான் உறுதியாய் அறிவேன்.

தமிழ்;நாட்டில், என்னுடன் நெருங்கிய தொடர்புடைய வயதான பெரியவர் ஒருவருக்குக் காது கேட்காமல் போய்விட்டது. ஆங்கில வைத்தியர்கள் அது முதுமையின் நிகழ்வு, மாற்ற முடியாது என்று சொல்லிவிட்டார்கள். தற்செயலாய் கிராமத்திலிருந்து வந்த ஒரு தமிழ் வைத்தியர் ஒரு எண்ணையைக் கொடுத்து 3 நாட்களுக்கு அதை முழங்காலில் தடவிக் கொள்ளும்படி சொல்லிப்போனார். அதன்படி அந்தப் பெரியவரும் செய்ய, அவருக்கு மூன்றே நாட்களில் காது மிகத் தெளிவாகக் கேட்கத் தொடங்கியதை நான் நேரில் கண்டேன். நல்லவை எங்கிருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதுதான் அறிவுடைமை.

**சல்லடையாரின் சலிப்பு * அந்த காது கேட்கப்பண்ணிய வைத்தியரின் 'அட்ரசை' வாரிதியாரிட்ட ஒருக்கா கேட்டு வாங்கவேணும்**

**8. உரலார் கேள்வி:-** நெடுந்தீவில் நடை பெற்ற ஐவர் கொலை எதனைக் காட்டுகிறது?

**உலக்கையார் பதில்:-** எல்லா இனத்திலும் கொடியவர்கள் இருக்கிறார்கள் என்பதைத்தான். சிறுதீவுக்குள் நடந்த பெருங் கொடுமை!

**சல்லடையாரின் சலிப்பு * இது மனித ஜாதி அல்ல! மிருகஜாதி!**

# இலங்கையில் வறுமையான மாவட்டம் நுவரெலியா தோட்டத்துறையில் 51.3 சதவீதமானோர் வறுமையில்

## 33.4 சதவீதமான சிறுவர்கள் வளர்ச்சி குன்றியவர்கள்; ஆய்வில் தகவல்

நாட்டில் 0 முதல் 11 மாதங்கள் மற்றும் 4 வயதுடைய சிறுவர்களில் பாதி பேர் ஏழைகளாக உள்ளதாகவும் குறிப்பாக 0 முதல் 11 மாதங்கள் வயதுடையவர்கள் போாக்கு குறைபாட்டையும் 4 வயதுடையவர்கள் முன்பள்ளிகளில் அனுமதிக்கப்படாமலும் உள்ளதாக தேசிய மற்றும் சிறுவர் ஆய்வுகள் மூலம் வெளியாகியுள்ளது.

அத்துடன் மாவட்ட மட்டத்தில் வறுமைநிலை என்பது கொழும்பில் குறைந்த அளவான 3.5 சதவீதமாகவும் உயர்வாக நுவரெலியாவில் 44.2 சதவீதமாகவும் காணப்படுகின்றது என்றும் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. இதன் போதே இந்த ஆய்வு தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டன.

2021 ஆம் ஆண்டில், பல்வேறு இணைச் செயற்பாட்டாளர்களுடன் நெருக்கமான ஆலோசனையிலும் மற்றும் ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் , ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனித அபிவிருத்தியின் முன்முயற்சி எனும் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடனும் இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் ஆனது இலங்கைக்கான முதல் அதிகாரபூர்வ தேசிய பல்பரிமாண வறுமைச் சுட்டெண்னை உருவாக்கியது.

இதற்காக குடித்தன வருமானம் மற்றும் செலவு பற்றிய அளவீடு – 2019 இன் தரவுகள் பயன்படுத்தப்பட்டது.

வறுமைக்கு பல அம்சங்கள் இருக்கும் போது, குறிப்பாக ஊட்டச்சத்து மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி போன்ற குழந்தை பருவத்திலுள்ள பற்றாக்குறைகள் பற்றிய அனுபவங்கள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். எனவே நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 1, இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'எல்லா இடங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதல்' என்ற சர்வதேச சமூகத்தின் அர்ப்பணிப்புக்கு இணங்க, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் உள்ள பற்றாக் குறைபாடுகள் உட்பட பணப் பற்றாக்குறைகளுக்கு அப்பால் தனிநபர்களுக்கான வறுமையை வெளிப்படுத்துகின்ற பல்வேறு வழிகளை இலங்கை அங்கீகரிக்கின்றது.

இலங்கையின் பல்பரிமாண வறுமைச் சுட்டெண் ஆனது வறுமையின் ஒரு விரிவான முழுமையான காட்சியை உருவாக்குகிறது. ஏழை மக்கள் அனுபவிக்கும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட குறைபாடுகளின் ஒரு தொகுதியில் கவனம் செலுத்துவதன் மூலம் ஏழை மக் கள் யார் மற்றும் அவர்கள் எப்படி ஏழைகள் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

குழந்தைகளை மையமாகக் கொண்ட கொள்கைகளை மேலும் ஆராய்வதற்கும் ஆதரவளிப்பதற்கும், தேசிய பல்பரிமாண வறுமைச் சுட்டெண் gPn போன்ற அதே குறிகாட்டிகள், இலங்கையில் இரண்டு முக்கிய முக்கியத்துவம் வாய்ந்த குழந்தைக்கான பற்றாக்குறைகள்: ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் குழந்தை பருவ வளர்ச்சி சேர்ந்து அடங்கும்.

0 – 4 வயதுடைய குழந்தைகளுக்கான தனிப்பட்ட குழந்தை gPn வடிவமைக்கப்பட்டது. தேசிய gPn உடன் நேரடியாகவும் துல்லியமாகவும் இணைக்கும் குழந்தை வறுமையின் முதல் உத்தியோகபூர்வ அளவீடாக இருப்பதில் இலங்கையின் குழந்தை முன்னோடியாக உள்ளது.

இலங்கை பல்பரிமாண வறுமைச் சுட்டெண் என்பது நிலைபேறான அபிவிருத்தி இலக்கு குறிகாட்டி 1.2.2 ('தேசிய வரையறைகளின்படி அதன் அனைத்து பரிமாணங்களிலும் வறுமையில் வாழும் அனைத்து வயதுடைய ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் விகிதம்') என அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்படும் பல பரிமாண வறுமையின் உத்தியோகபூர்வ நிரந்தர புள்ளிவிவரமாகும் மற்றும் பண வறுமை அளவை பூர்த்தி செய்யப் பயன்படுகிறது.

இன்னும், பல்பரிமாண வறுமைச் சுட்டெண் gPn என்பது வெறும் ஒரு புள்ளிவிவரம் அல்ல. இது ஒரு கொள்கைக்கான கருவியாகும். சமூக பிரிவுகளுக்கு, கவனம் செலுத்திய தலையீடுகள், கொள்கை வடிவமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குரிய அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் பட்ஜெட் ஒதுக்கீடுகளை தெரிவிப்பதன் மூலம் – வரையறுக்கப்பட்ட வளங்களுடன் பல்வேறு பிரிவுகளில் வறுமைக் குறைப்பை விரைவுபடுத்துவதற்கு பொருத்தமான தகவல்களை வழங்குகிறது. வெவ்வேறு பரிமாணங்களில் ஒரே நேரத்தில் பற்றாக்குறையைப் படம்பிடிப்பதற்கு மேலதிகமாக, தேசிய மற்றும் குழந்தை gPnக்கள் வயது, பாலினம் அல்லது இருப்பிடம் ஆகிய–வற்றின் அடிப்படையில் மேலும் பிரிக்கப்படலாம். கொள்கை தலையீடுகளை மையப்படுத்துவது எவ்வாறு என்பது பற்றிய விரிவான நுண்ணறிவுகளை வழங்குவதன் மூலம், யாருக்காக மற்றும் எங்கு, வறுமைக்கு பல்வேறு குறைபாடுகள் எந்த அளவிற்கு பங்களிக்கின்றன என்பதைக் காட்ட இது பயன்படுத்தப்படலாம்.

இலங்கை தேசிய பல்பரிமாண வறுமைச் சுட்டெண் மற்றும் குழந்தை பல்பரிமாண வறுமைச் சுட்டெண் ஆகிய–வற்றில் இருந்து வெளிவரும் சில முக்கிய கண்டுபிடிப்புகள் உள்ளடக்குவது:

இலங்கையில் உள்ள மக்களில் ஆறில் ஒருவர் (16 சதவீதம்) பல்பரிமாணங்களில் ஏழைகளாக உள்ளனர்.

கொள்கை ரீதியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலையில் பெருந்தோட்டப் பகுதிகள் வறுமையின் தனிப்படுத்தப்பட்ட இடைக்குழிவுகள் ஆகும், இந்த பகுதிகளில் உள்ள அனைத்து மக்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் (51.3 சதவீதம்) வறுமையில் வாழ்கின்றனர்.

ஒவ்வொரு பத்தில் எட்டுக்கும் அதிகமான (80.9 சதவீதம்) ஏழை மக்கள் கிராமப்புறங்களில் வசிப்பதால் கிராமப்புறங்களும் முக்கிய கவனம் செலுத்தும் புள்ளியாக உள்ளது.

மாவட்ட மட்டத்தில் வறுமைநிலை என்பது கொழும்பில் குறைந்த அளவான 3.5 சதவீதத்திலிருந்து நுவரெலியாவில் 44.2 சதவீதமாக கணிசமாக வேறுபடுகின்றது.

ஒரேமாதிரியான மதிப்புகளைக் கொண்ட மாவட்டங்களில் கூட, அதிக செலவு அற்ற செயற்பாட்டினைத் திட்டமிட, அதிக வினைத்திறனான கொள்கைகள் வறுமையின் குறிகாட்டிகளை கூட்டாக கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் மிகவும் ஏழ்மையான வயதின குழுவினராக 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் உள்ளனர். இவர்களின் அதிக தலைவிகிதாசார விகிதம் (17.9 சதவீதம்) gPn மற்றும் வறுமையின் தீவிரம் காணப்படுகிறது.

உடனடியான கொள்கை ரிதியிலான கவனம் தேவைப்படும் குறைபாடுகளாக போதுமான சுகாதார வசதிகளை அணுக முடியாதிருத்தல் மற்றும் அடிப்படை வசதிகள், தூய சமையல் எரிபொருள்கள் மற்றும் பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமை ஆகும்.

பற்றாக்குறை வடிவங்கள் – எனவே கொள்கை மற்றும் பாதிட்டு பிரதிஉபகாரங்கள் – மாவட்டம் மற்றும் வயதின் அடிப்படையில் மாறுபடும்.

5 வயதிற்குட்பட்ட சிறுவர்களில், சிறுவர் பயன்படுத்தும் போது ஒவ்வொரு 10 சிறுவர்களில் நான்கிற்கும் (42.2 சதவீதம்) அதிகமானோர் பல்பரிமாணங்களில் ஏழைகளாக உள்ளனர்.

தேசிய மூலம் ஏழைகளாகக் கருதப்படும் அனைத்து சிறுவர்களும் தனிப்பட்ட நிலையில் சிறுவர் மூலம் சமகாலத்தில் ஏழைகளாக உள்ளனர். மேலதிகமாக, நான்காவது பரிமாணத்தை சிறுவர் ஆனது ஒவ்வொரு குழந்தையின் ஊட்டச்சத்து மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் உள்ள குறைபாடுகளை உள்ளடக்கியதாகவுள்ளது.

0– 4 வயதுடைய சிறுவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் (33.4 சதவீதம்) பல்பரிமாண ஏழ்மைநிலையிலும் எடை குறைவாகவோ அல்லது வளர்ச்சி குன்றியவர்கவோ உள்ளனர்.

0 – 4 வயதுடைய சிறுவர்களில் ஆறில் ஒரு பங்கினர் (16.4 சதவீதம்) பல்பரிமாண ஏழைகளாகவும் குழந்தைப் பருவ வளர்ச்சியில் பின்தங்கியவர்களாகவும் உள்ளனர்.

0 – 11 மாதங்கள் மற்றும் 4 வயதுடைய சிறுவர்களில் பாதி பேர் ஏழைகளாக உள்ளனர், குறிப்பாக 0 – 11 மாதங்கள் வயதுடையவர்கள் போாக்கு குறைபாட்டையும் 4 வயதுடையவர்கள் முன்பள்ளிகளில் அனுமதிக்கப்படாமலும் உள்ளனர்.

ஊக்கமளிக்கும்வகையில், இலங்கையில் ஆண்பிள்ளைகள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு இடையில் வறுமை நிலைகளுக்கு புள்ளியியல் ரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவும் இல்லை.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=


Neithal Beach City
வார இறுதி நாட்களில்
யாழ்ப்பாணத்துச் சுவையில்
5 கறிகளுடன் வாழையிலைச் சாப்பாடு!
கோழிக்கறியும் உண்டு!
உணவு நேரம் காலை 11.30 முதல் பி.ப.1.30 வரை
ஏமாற்றத்தைத் தவிர்க்க
இப்போதே அழைத்து
முன்பதிவு செய்துகொள்ளுங்கள்!
0777276818




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 15 வெள்ளிக்கிழமை 28.04.2023 கதிர் 42

## பின்வாங்கியது ரணில் ஆட்சி

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் திருத்தியதன் பின்பே சமர்ப்பிப்பு

### நாடாளுமன்றில் இன்று பகிரங்கமாக அறிவிப்பு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் அவசரமாகச் சமர்ப்பிக்கப் போவதில்லை என்று இந்த ஆட்சி அறிவித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இதனை இன்று நாடாளுமன்றில் அறிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமே தற்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. பல்வேறு தரப்பினரும் காட்டிய எதிர்ப்புக் காரணமாக இந்தச் சட்டமூலத்தை அப்படியே அவசரப்பட்டு நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் குறித்து எவரும் தமது ஆலோசனைகளை வழங்கலாம்.

இந்நிலையில் அனைவரின் கருத்துக்களும் உடன்பாடுகளும் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் – என்றார். (02)



## அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குவேன் என கோட்டா மிரட்டல்

### பழைய கதை சொல்கிறார் சந்திரசேன



இரசாயனப் பசளைத் தடைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டால் அமைச்சுப் பதவியில் இருந்து தம்மை நீக்குவதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தம்மை அச்சுறுத்தினார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2

## அரச நிறுவனங்களை அவசரப்பட்டு விற்காதீர்

### சஜித் அணி வலியுறுத்து



அரச நிறுவனங்களைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்பது தப்பில்லை. அதற்காக இலாபம் அடைகின்ற எல்லாவற்றையும் அவசரப்பட்டு விற்க முடியாது – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

இலாபம் பெறும் அரச நிறுவனங்களை விற்பதை எம்மால் ஏற்க முடியாது. தேவையில்லாத சர்வதேச கடன்களைப் பெற்று எம்மால் தாங்கிக்கொள்ள முடியாத வேலைத்திட்டங்களை செய்தனர். அதன் பிரதிபலன்களை நாம் இன்று அனுபவிக்கின்றோம்.

இதனால் உண்டான கடன்களை அடைப்பதற்காக நாட்டின் வளங்களை –இலாப மீட்டும் நிறுவனங்களை விற்பதை ஏற்க முடியாது.

அதேவேளை, தனியார் இல்லாமல் எல்லாப் பிரச்சினைகளையும் அரசால் செய்ய முடியாது. முன்பு தொலைபேசி பழுதானால் அதைத் திருத்துவதற்காக ரெலிகாம் ஊழியர்களின் பின்னால் அலைய வேண்டும். இப்போது அது தனியாருக்குக் கொடுத்துள்ளதால் அந்தப் பிரச்சினை இல்லை.

ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனம் எமிரேட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செயற்படும்போது இலாபம் கிடைத்தது. பின்னர் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனத்தை மஹிந்த அரச உடமையாக்கியதும் கோடிக்கணக்கில் நட்டம் ஏற்பட்டு வருகின்றது.

உலகத்தோடு சேர்ந்து போக வேண்டும். இப்படியே இருந்தால் முன்னேற முடியாது. அதற்காக இலாபம் அடைகின்ற எல்லாவற்றையும் அவசரப்பட்டு விற்க முடியாது. அப்படிச் செய்து எப்படி அரசின் இலாபத்தை அதிகரிப்பது?

அஜித் நிவார்ட் கப்ரால் தங்கத்தை விற்றது போல் விற்க முடியாது. நன்றாக ஆய்வு செய்த பின்தான் விற்க வேண்டும். அரசு வர்த்தக செயற்பாடுகளில் இருந்து விலக வேண்டும்.

அன்று அரசின் கையில் இருந்தபோது டெலிகொம் இலாபமடையவில்லை. தனியாருக்குக் கொடுத்ததன் பின்தான் இலாபமீட்டியது. இப்போது இருக்கின்ற முறைமைக்கு ஏற்பவே நாம் பயணிக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களை எப்படி வாழவைப்பது என்று யோசிக்க வேண்டும். அதனால்தான் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்று நாம் ஆரம்பத்தில் இருந்தே கூறி வந்தோம். நாடு வங்குரோத்து அடையும் முன்பே போகச் சொன்னோம். ஆனால், நாம் வங்குரோத்து அடைந்த பின்பே சென்றோம்.

நாடு வீழ்ந்து கிடக்கும் நேரத்தில் பஸ்களுக்குத் தீ வைக்க முடியாது. ட்ரான்ஸ்போமருக்குத் தீ வைக்க முடியாது. அப்படிச் செய்தால் நாடு இன்னும் சிக்கலில்தான் விழும். – என்றார். (02)

## மக்களை அடிமைப்படுத்தி ஆட்சியை தொடரலாம் என அரசு தப்புக்கணக்கு

### டலஸ் எம்.பி. குற்றச்சாட்டு



மக்களைக் கஷ்டப்படுத்தி – அடிமைப்படுத்தி –கொடுமைப்படுத்தி ஆட்சியைத் தொடரலாம் என அரசு தப்புக் கணக்குப் போட்டுள்ளது – என்று சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெரும எம்.பி. குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு பக்கம் பொருட்களின் விலைகளை அதிகரித்த அரசு மறுபக்கம் வரிகளையும் உயர்த்தியது. இப்போது, தமக்கு எதிராகப் பொங்கியெழுவோரை அடக்குவதற்காகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற கொடிய சட்டத்தையும் நிறைவேற்ற அரசு படாத பாடுபடுகின்றது. அரசின் இந்த அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். இதில் இன, மத, கட்சி வேறுபாடு இருக்கக் கூடாது. இப்படியான வேற் பாடுகளால்தான் நாடு பின்னோக்கிப் பயணித்தது.

இன, மத, கட்சி வேறுபாடுகளை மறந்து நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஓரணியில் நிற்க வேண்டும். – என்றார். (02)

## ஜனாதிபதித் தேர்தல் பற்றி சிலர் அவசரப்பட்டு கருத்து

### அமைச்சர் பந்துல விசனம்



அறிவிக்கப்படாத ஜனாதிபதித் தேர்தல் குறித்து சிலர் அவசரப்பட்டு கருத்து வெளியிட்டு வருகின்றனர் – என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசு இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

மொட்டுக் கட்சியின் வேட்பாளர் தொடர்பில் சிலர் தமது சொந்தக் கருத்துக்களையே வெளியிடுகின்றனர்.

அந்தக் கருத்துக்கள் கட்சியின் நிலைப்பாடு அல்ல. அவர்கள் தமது சொந்தக் கருத்துக்களை – தமது தனிப்பட்ட நிலைப்பாடுகளையே வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் மொட்டுக் கட்சி ஒன்றுகூடி வேட்பாளர் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும்.

வெற்றிபெறக்கூடிய சிறந்த வேட்பாளரே களமிறங்குவார். அவர் யார் என்று இப்போது தெரியாது. என்றார். (02)

## எந்த நிறுவனத்தையும் அரசு விற்கவேமாட்டாது

### ஆசு மாரசிங்க கூறுகின்றார்



அரசின் எந்தச் சொத்துக்களையும் அரசு விற்காது. காணியின் – நிறுவனங்களின் உரிமையை வைத்துக்கொண்டு குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் – என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

52 அரச நிறுவனங்கள் 2022 இல் அடைந்த நட்டம் 932 பில்லியனாகும். ரெலிகொம் நிறுவனம் 163 வயதைக் கொண்டது. இருந்தும், தொலைபேசி இணைப்பு ஒன்றைப் பெறுவதற்காக அன்று பாடுபட்டோம். இன்று அதன் பங்குகள் ஜப்பான் நிறுவ னத்தி டம் கொடுக்கப்பட்டதால் அந்தப் பிரச்சினைகள் இல்லை. இலாபம் மீட்டும் நிறுவனமாக ரெலிகொம் மாறியுள்ளது. சேவைகளும் தரம்.

இருந்தும் ,அந்த நிறுவனத்திடம் இருக்கின்ற வளங்களுக்கு ஏற்ப இன்னும் இலாபம் மீட்ட முடியும். அதற்கு ஏற்ப அதை இன்னும் மறுசீரமைக்க வேண்டும்.

குறைந்த ஊழியர்களைக் கொண்ட டயலொக் நிறுவனம் அதிக இலாபம் பெறுகின்றது. கூடிய ஊழியர்களைக் கொண்ட ரெலிகொம் அதை விடக் குறைந்த இலாபத்தையே பெறுகின்றது.

அதிக இலாபம் மீட்டும் நிறுவனமாக ரெலிகொம்மை மாற்ற வேண்டும் என்றால் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். – என்றார். (02)

## திருமலை மாவட்டத்தில் டெங்கு நோய் தாண்டவம்

### மக்களுக்கு எச்சரிக்கை



திருகோணமலை மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண தொற்று நோய் தடுப்பு வைத்திய நிபுணர் வைத்தியர் எஸ். அருள்குமரன் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த மாதம் மாத்திரம் திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 600 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலை நகரத்தை அண்டிய பகுதிகளில் 325 நோயாளர்கள் 2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை உடன் வாபஸ் பெற வேண்டும் ரணில்

### ரத்தன தேரர் வலியுறுத்து



மக்களோடு மோதும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட–மூலம் தேவையில்லை. இதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாகக் கைவிட வேண்டும் – என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏனையவர்களைவிட மற்றவர்களின் கருத்துக்களைச் செவிமடுக்கக்கூடியவர். ஆனால், அவருக்கென்று ஒரு திட்டம் உண்டு. அவர் அதையே செய்வார்.

அவர் நினைத்ததையே செய்பவர். அவர் பொது இணக்கப்பாட்டின் கீழ் வேலைசெய்பவர் அல்லர்.

மத்தியவங்கியை சுயாதீனமாக்கு–வதற்கான சட்ட–மூலம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் எல்லாம் அவர் தான் தோன்றித்தனமாகக் கொண்டு வருவது. இதற்கு மக்களின் இணக்கம் கிடையாது.

நாட்டைப்பிரிப்பதுபோன்ற பயங்கரவாதம் இப்போது இங்கு இல்லை. இருப்பது சிவில் பிரச்சினை. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தேவை இல்லை. இது மக்களோடு மோதும் விடயம்.

இவற்றையெல்லாம் ஜனாதிபதி ரணில் கைவிட வேண்டும்.

சிக்கலான நேரத்தில் நாட்டைப் பாரமேற்று உடனடியாக வழமையான நிலைமையைக் கொண்டு வந்தவர் ரணில். அந்தக் கௌரவத்தை அவர் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் – என்றார். (02)

## இலங்கை அணி வீரர் இன்று உலக சாதனை




குறைந்த எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய உலகின் முதலாவது சுழல் பந்து வீச்சாளர் என்ற சாதனையை இலங்கை அணி வீரர் பிரபாத் ஜயசூரிய இன்று தனதாக்கிக் கொண்டுள்ளார்.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் அயர்லாந்துடன் இடம்பெற்று வரும் டெஸ்ட் போட்டியில் போல் ஸ்டேர்லினை ஆட்டமிழக்கச் செய்தமையூடாக தனது 50 ஆவது விக்கெட் சாதனையை அவர் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் குறைந்த டெஸ்ட் போட்டியில் 50 விக்கெட்டுக்களை 2

## சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க வலியுறுத்தி மீனவர் ஆர்ப்பாட்டம்

(பழுவூரான்)



சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி மட்டக்களப்பு முகத்துவாரம் மற்றும் பாலமீன்மடு பகுதி மீனவர்களினால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இன்று மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல் வளங்கள் 2

## மேலும் அழிவை நோக்கி செல்கின்றது இலங்கை

### ரில்வின் சில்வா எச்சரிக்கை



இனிக் கடன் எடுப்பதற்கு இடமும் இல்லை. விற்பதற்கும் பொருளும் இல்லை. நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பில்லை. மேலும் அழிவை நோக்கியே நாடு செல்கின்றது – என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் உண்மை நிலை தெரிந்தவர்கள் அறிவார்கள் நாடு மேலும் 2

# இலவசமாக அரிசி வழங்கும் அரச திட்டத்தின் 2ஆம் கட்டம் இன்று வேலணையில் ஆரம்பம்






வருமானம் இழந்த குடும்பங்களுக்கு இலவச 10 கிலோ அரிசி கொடுக்கும் அரச திட்டத்தின் இரண்டாம் கட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் தொடக்கி வைக்கப்பட்டது. இதன் முதல் நிகழ்வு வேலணை பிரதேச செயலகத்தில் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பியும் பாஸ்குவல், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, இலங்கை இராணுவத் தளபதி விக்கும் லியனகே, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரம், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்,வடபகுதி கடற்படை கட்டளை அதிகாரி,இலங்கை இரானுவத்தின் 51ஆவது கட்டளைத் தளபதி, வேலணை பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 220 பயனாளிகளுக்கு அரிசிப் பொதி அதிதிகளால் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் உரையாற்றிய மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது,

வறிய மக்களுக்கு உதவும் முகமாக நாடு முழுவதும் 20 லட்சம் குடும்பங்களை தெரிவு செய்து ஒரு குடும்பத்திற்கும் தலா 10 கிலோ எடையுடைய அரிசி வீதம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

பாரபட்சமற்ற விதத்தில் ஜனாதிபதி இந்த முடிவினை எடுத்துள்ளார் இந்த முடிவினை எடுத்தது கிளிநொச்சி விவசாயிகளோடு ஜனாதிபதி களத்தில் சந்தித்தபோது. நெல்லுக்கான உத்தரவாத விலையினை நூறு ரூபாவாக அறிவித்து இந்த திட்டத்தையும் அவர் அதில் அறிவித்திருந்தார்

இலங்கையினுடைய ஏனைய மாவட்டங்களைவிட வடக்கில் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. அந்த வகையில் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

நாடாளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்டைக்காடில் இருநூறு ஏக்கர் சீனாவுக்கும் கிளிநொச்சியில் 800 ஏக்கர் வெளிநாடுகளுக்கும் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார். அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. பொய் கூறி மக்களை தவறாக வழிநடாத்துகின்றனர். வாக்குகளை அபகரிக்க கூடிய வகையில் கருத்துக்களை வைத்து வருகின்றார்கள் ஆனபடியினால் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். போதை வஸ்து பற்றி பேசுகின்றோம் இவர்களுடைய இந்த கருத்துக்களும் மக்களுக்கு ஒரு போதை ஊட்டக்கூடிய வகையில்தான் அமைந்திருக்கின்றன ஆனபடியினால் விழிப்பாக இருக்க வேண்டும் என நான் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்,

சாகல ரத்னாயக்க தனது உரையில் தெரிவித்ததாவது:

புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் முதலீடு செய்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுமாறு அனைவரும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுகிறோம்.

இலங்கை ராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதோடு பெரும்பாலான இடங்களில் நெல் உற்பத்தியிலும் ஈடுபடுகின்றார்கள் இலங்கை ராணுவத்தினரின் விவசாய திட்டத்தில் பெரும்போக அறுவடையின் பின்னர் தமது செலவுகளினை கழித்துவிட்டு மிகுதி நெல்லினை ஏழை மக்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றனர் என்று ராணுவ தளபதி ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார் அவர்களுடைய விருப்பத்தின்படி இன்றைய தினம் அது மக்களுக்கு வழங்கப்படவுள்ளது

நாட்டில் ஏற்பட்ட போர் அழிவுகளுக்குப் பின்னர் நாங்கள் கடந்த சில ஆண்டுகளாக வேறு பல பிரச்சினைகளுக்கு ம் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதாவது கொரோனா நிலை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதேபோல பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கும் நாங்கள் முகம் கொடுக்க வேண்டி இருந்தது அதேபோல பொருட்களைக் கொள்ளவும் செய்ய வரிசைகளில் நிற்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது

அது வடக்கு கிழக்கு அல்ல தெற்கு மக்கள் என்றல்லாது இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்குமான பிரச்சினையாக காணப்பட்டது. அந்தநேரத்தில்தான் தற்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்க இந்த நாட்டினை முன்னேற்றுவதற்காக ஜனாதிபதி பதவியினை பொறுப்பேற்றிருந்தார்

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படச் செய்தார். மக்களுக்கான பிரச்சினைகளையும் ஒவ்வொன்றாகத் தீர்க்க நடவடிக்கை எடுத்தார்,

நாங்கள் முன்னோக்க நகர்கின்றோம் ஒரு அடி ஏனும் பின்னோக்கி செல்ல மாட்டோம் என்ற அடிப்படையில் தற்போது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் திட்டத்தில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இந்த வேலை திட்டத்தில் முழு இலங்கையும் உள்ளடங்கப்பட்டுள்ளது.

வட பகுதியில் விவசாயத்தை நவீனமயப்படுத்தி விவசாயத்தை முன்னேற்றி அதேபோல காங்கேசன்துறை துறைமுகத்தை இந்தியா நாட்டின் உதவியுடன் அபிவிருத்தி செய்து, வர்த்தகத்தை ஏற்படுத்தி வடபகுதியில் சுபிட்சமான நிலையை ஏற்படுத்த நாங்கள் முனைகின்றோம்

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படும் அதேபோல சமுர்த்தி கிடைக்காத குடும்பங்களும் தமக்கு சமுர்த்தி கிடைக்காமை தொடர்பில் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் அதாவது விண்ணப்ப படிவம் ஒன்றினை பூர்த்தி செய்து உரிய அலுவலருக்கு அனுப்புவதன் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ளமுடியும் – என்றார் ,

## திருமலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயின் தாக்கம் காரணமாக உப்புவெளிப் பிரதேசத்தில் 6 வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நோயின் தாக்கத்தால் திருகோணமலை நகரப் பகுதி, உப்புவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதி மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் கிழக்கு மாகாண தொற்று நோய் தடுப்பு வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்துள்ளார். (02)

## மேலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னோக்கிச் செல்லப்போகின்றது என்று. இருப்பதைவிட பெரிய பிரச்சினைகள் வரப்போகின்றன. இதுவொரு இடைவேளை.

கடனை அடைப்பதற்கு மேலும் கடன் வாங்குதல், அரச நிறுவனங்களை விற்றுக் கடனை அடைத்தல் போன்றவை நாட்டை முன்னேற்றுவதற்கு உதவாது.

இருக்கின்ற கடைசி சொத்தையும் விற்று கடன் வாங்கும் இடம்தான் ஐ.எம்.எப். இப்போது இந்த ஆட்சியாளர்கள் அங்கும் கடன் வாங்கிவிட்டார்கள். அதற்கு அப்பால் என்ன செய்வது?

ஒரு டொலரையாவது மேலதிகமாகச் சம்பாதிப்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இல்லை. அரச நிறுவனங்களை விற்றுப் பணம் தேடும் நிலைப்பாட்டில் மட்டும்தான் அரசு ஈடுபட்டுள்ளது. அது மட்டும்தான் அரசிடம் இருக்கும் ஒரேயொரு திட்டம்.

இனிக்கடன் எடுப்பதற்கு இடமும் இல்லை. விற்பதற்கும் பொருளும் இல்லை. நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பில்லை. மேலும் அழிவை நோக்கியே நாடு செல்கின்றது.

மக்களின் நுகர்வு குறைந்துள்ளது. இதனால் பொருட்களின் இறக்குமதி குறைந்துள்ளது. இதனால் கொஞ்சம் டொலர் மிஞ்சியுள்ளது.

இதை வைத்துக்கொண்டு நாடு நல்ல நிலைமையை அடைந்துள்ளது என்று சொல்ல முடியுமா? இப்படியே நாட்டைக் கொண்டு செல்ல முடியுமா?

மக்கள் விரும்பிய பொருட்களை விரும்பியவாறு வாங்க முடியாமல் பயந்து பயந்து வாங்குவது பொருளாதார முன்னேற்றமா?

சாப்பாட்டு பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் அதன் கொள்வனவு குறைந்துள்ளது. மக்கள் சாப்பிடுவதைக் குறைத்துள்ளனர்.

எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாலும் கோட்டா முறையின் கீழ் எரிபொருள் வழங்கப்படுவதாலும் மக்கள் தேவையான அளவு மாத்திரமே எரிபொருள் வாங்குகின்றனர். சுற்றுலா செல்வதில்லை, தூர இடங்களுக்குச் செல்வதில்லை. இதனால் பெற்றோல் வரிசை இல்லை.

இதெல்லாம் மேலோட்டமாகப் பார்க்கும் போது நிலைமை சரி வந்துவிட்டது போல் தெரிகின்றது. ஆனால், உண்மை அதுவல்ல. நிலைமை மேலும் மோசமடையும். – என்றார். (02)

## அமைச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு நாட்டில் உள்ள வைத்தியர்கள் தவறான ஆலோசனைகளை வழங்கினர்.

இராசயனப் பசளை பயன்பாடு காரணமாக சிறுநீரக நோய் ஏற்படுகின்றது எனவும், இதன்காரணமாக சேதன பசளையைப் பயன்படுத்துமாறும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கினர்.

இது தொடர்பாக தாம் வழங்கிய ஆலோசனைகளை கோட்டாபய ராஜபக்ச ஏற்கவில்லை. – என்றார். (02)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்த்திய முதலாவது இலங்கை வீரர் என்ற சாதனையையும் அவர் புரிந்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த சார்ல்ஸ் தோமஸ் டர்னர் 6 டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையைத் தனதாக்கியிருந்தார்.

எனினும், 7 டெஸ்ட் போட்டிகளில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதலாவது சுழல் பந்து வீச்சாளர் என்ற பெருமையை பிரபாத் ஜயசூரிய தனதாக்கிக்கொண்டுள்ளார். (02)

## சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

எமது மட்டக்களப்பு கடற்பரப்பில் சட்டவிரோதமாக டைனமிட் அடிப்பதை தடை செய்க, "கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதை தடை செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கடற்தொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்துக்கு முன்பாக அமைதியான முறையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கடற்தொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்குள் சென்று சட்டவிரோதமாக டைனமிட் அடிப்பதை தடை செய்து தருமாறு கோரிக்கையினை முன்வைத்து மகஜர் ஒன்றையும் திணைக்கள அதிகாரியிடம் கையளித்தனர்.

அத்தோடு மீனவர்களினால் இந்த டைனமிட் பாவனையினால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அதற்கான உரிய தீர்வினை விரைவாகப் பெற்றுத் தருமாறும் திணைகள் அதிகாரியிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். அதனைத் தொடர்ந்து திணைக்கள அதிகாரி இவற்றிற்கான நடவடிக்கையினை விரைவாக முன்னெடுத்து உரிய தீர்வினை பெற்றுத் தருவதாகக் கூறியதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

# சிறந்த தலைவருக்கு எப்போதும் பேராதரவு

## மஹிந்த தெரிவிப்பு



*சிறந்ததலைவருக்குநாம்எப்போதும் முழு ஆதரவு வழங்குவோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.*

*கண்டிக்கு இன்று பயணம் மேற்கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ச, தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஊடகங்களிடம் அவர் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.*

*மக்கள் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்குத் தீர்வை வழங்கக் கூடிய எந்தவொரு நபருக்கும் நாம் முழுமையான ஆதரவு வழங்குவோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.*

*'பிரதமர் பதவியை மீண்டும் எப்போது பொறுப்பேற்கவுள்ளீர்கள்?' என்ற கேள்விக்கு அவர் நேரடிப் பதில் எதனையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*(02)*

# ஒரே குடும்பத்தவர் 7 பேர் தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து கடல் வழியாக படகு மூலம் பயணித்து இந்திய ஆளுகையில் உள்ள தீடையில் இறங்கிய இவர்களை அவதானித்த தமிழக மீனவர்கள் பொலி–ஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பொலிசார் கரையோர காவல் படையினருக்குத் தகவல் வழங்கியதனையடுத்து தீடைக்குச் சென்ற கரையோர காவல் படையினர் ஏழு பேரையும. மீட்டு கரைக்கு கொண்டு சென்றனர். இவ்வாறு தமிழகத்திற்குச் சென்ற ஏழுபேரும. முல்லைத்தீவு தீர்த்தக்கரையைச் சேர்ந்தவர்கள் எனவும் கணவன் மனைவி மற்றும் ஐந்து பிள்ளைகளும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# கதிர்காமம் மாணிக்க கங்கையில் முதலைகள் நடமாட்டம் அதிகரிப்பு

கதிர்காமம் மாணிக்க கங்கையில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதால் அங்கு நீராடச் செல்லும் பக்தர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர் எனப் பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கதிர்காமம் இலக்கம் 2 பாலத்துக்கு அருகில் இந்த முதலைகள் கடித்து இரண்டு மாதங்களில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இது தவிர கடந்த நவம்பர் மாதம் செல்லக் கதிர்காமத்தில் பெண் ஒருவர் முதலைக்கு பலியானார்.

தற்போது கதிர்காமம் இலக்கம் 01, 02, 03 ஆகிய பாலங்களுக்கு அருகில் சுமார் 7 அடி நீளம் கொண்ட முதலைகள் நடமாடுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்

# அரநாயக்கவில் 58 வயது தேரரால் 16 வயதான தேரர் துஷ்பிரயோகம்

அரநாயக்க பிரதேசத்தில் உள்ள விஹாரை ஒன்றைச் சேர்ந்த 16 வயதுடைய தேரர் ஒருவரை அதே விகாரையில் வசிக்கும் 58 வயதான தேரர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என அரநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

16 வயதுடைய புதிய பிக்குவை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் விகாரையைச் சேர்ந்த மற்றொரு பிக்குவை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு சந்தர்ப்பங்களில் இந்த புதிய பிக்குவை கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

# சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு போதையூட்டக்கூடிய வகையில் செயற்படுகின்றார்கள்

## டக்ளஸ் தேவானந்தா சாடல்

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மக்களுக்கு போதையூட்டக்கூடிய வகையில் கருத்துக்களை வெளியிடுகின்றனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) வேலனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இராணுவத்தின் மேலதிக பங்களிப்புடன் வறிய குடும்பங்களுக்கான இலவச அரிசிப்பொதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

வறிய மக்களுக்கு உதவும் முகமாக நாடு முழுவதும் 20 லட்சம் குடும்பங்களைத் தெரிவு செய்து ஒரு குடும்பத்துக்கும் தலா 10 கிலோ எடையுடைய அரிசி வீதம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாரபட்சமற்ற விதத்தில் ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார். இந்த முடிவை எடுத்தது கிளிநொச்சி விவசாயிகளோடு ஜனாதிபதி களத்தில் சந்தித்தபோது நெல்லுக்கான உத்தரவாத விலையை நூறு ரூபாவாக அறிவித்து இந்த திட்டத்தையும் அவர் அதில் அறிவித்திருந்தார்.

அந்த வகையில் பாரபட்சமற்ற வகையில் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றார். வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் இலங்கையினுடைய ஏனைய மாவட்டங்களைவிட சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெறுகின்றது. அந்த வகையில் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இந்த பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதாவது ஒரு தேவையற்ற யுத்தம் காரணமாக விசேடமான பிரச்சினைகள் எதிர்கொள்ளப்பட்டன.



இந்த பிரச்சினைகளில் இருந்து விடுபட்டுள்ள போதிலும் எங்கள் மக்கள் தற்போது நாடு தழுவிய ரீதியில் பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துவருகின்றார்கள்.

அந்த வகையில் இந்த நாடு கடந்த காலத்தில் தேவையற்ற யுத்தம் காரணமாக கொரோனா தொற்று காரணமாக நிதி மற்றும் பொருளாதாரம் தொடர்பாக ஆட்சியில் இருந்த தலைவர்களிடம் முறையான முகாமைத்துவம் இல்லாததுமை காரணமாக எங்களுடைய நாடு பொருளாதார ரீதியில் அதலபாதாளத்துக்கு சென்றுவிட்டது.

அந்த நேரத்தில் இந்த நாட்டுக்கு தலைமை தாங்கக்கூடிய பாதிப்பில் இருந்து மக்களை மீட்கக்கூடிய முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய வகையில் யாரும் இருக்கவில்லை. எல்லோரும் பின்னடித்த நேரத்தில் எங்களுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தமைக்காக மக்களின் சார்பில் நான் அவருக்கு பாராட்டை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்

நாட்டுத்தலைவர்களுக்குள் மாண்புமிகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் இந்த இக்கட்டான நிலைமையில் இருந்து எங்களை முன் கொண்டு செல்லக்கூடிய ஒரு தலைவர் – தியாகி – இருக்கின்றபடியால் நாங்கள் அவரோடு நம்பிக்கையோடு பயணிக்கலாம் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு தெளிவு படுத்த வலியுறுத்த – விரும்புகின்றேன்.

நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்டைக்காடில் இருநூறு ஏக்கர் சீனாவுக்கும் கிளிநொச்சியில் 800 ஏக்கள் வெளிநாடுகளுக்கு கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்தார். அதில் எந்தவிதமான உண்மை இல்லை. நமது அரசாங்கத்தில் அவ்வாறு திட்டமும் இல்லை. எந்தவிதமான அடிப்படையும் இல்லாமல் அவ்வாறான பொய்யை நாடாளுமன்ற உறுப்பினர் சிறினிகள் போன்ற சில தமிழ் உறுப்பினர்கள் சாணியல் போன்ற சில உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலே இப்படியான உரைகளை முன்னெடுப்பதன் ஊடாக சாணி சிறினி போன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பொய் கூறி மக்களைத் தவறாக வழிநடத்துகின்றனர்.

வாக்குகளை அபகரிக்கக் கூடிய வகையில் கருத்துக்களை வைத்து வருகின்றார்கள். ஆனபடியால் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். போதை வஸ்து பற்றி பேசுகின்றோம் இவர்களுடைய இந்த கருத்துக்களும் மக்களுக்கு ஒரு போதை ஊட்டக்கூடிய வகையில் தான் அமைந்திருக்கின்றன.

அதனால் விழிப்பாக இருக்க வேண்டும் என நான் தெரிவித்துக் கொள்கின்றேன். பொய்களை கூறி மக்களிடமிருந்து வாக்குகளை அபகரிப்பதற்காக அவர்கள் பொய்யான விடயங்களை பேசுகின்றார்கள் என்பதை மக்கள் மிகவும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். – என்றார்.

# பொலிஸ் பரிசோதகருக்கு இலஞ்சம் கொடுத்து கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது

இலஞ்சம் கொடுத்து ஏறாவூர் பொலிஸ் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில், சந்தேகத்தின்பேரில் புதன்கிழமை மாலை கைதுசெய்யப்பட்ட இருவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் ஊடாக தெரியவருவதாவது –

கடந்த வெள்ளிக்கிழமை ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு தகவலொன்று கிடைத்துள்ளது.

அதன்படி, மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ரயில் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை பகுதியில் தரித்து நிற்பதாகவும், அந்தத் ரயில் தண்டவாளத்தில் மோட்டார் சைக்கிளொன்று எரிந்துகொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்த அத்தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

அதன்படி, முன்னதாக வந்தாறுமூலை பகுதியை சேர்ந்த இளைஞர் குழுவுக்கும் ஐயங்கேணி பகுதி சேர்ந்த இளைஞர் குழுவுக்கும் இடையே காணப்பட்ட முன்விரோத மோதல் இடம்பெற்றுள்ளது.

ஐயங்கேணி பகுதியில் இருந்து வாள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களோடு வந்த குழுவினர், வந்தாறுமூலை பகுதியை சேர்ந்த இளைஞர் குழுவினரை தாக்கும் முயற்சியில் ஈடுபட்ட நிலையில் இரு தரப்பினரிலும் சிலர் காயமடைந்திருந்தனர்.

இந்நிலையில், ஐயங்கேணி பகுதியில் இருந்து வந்தாறுமூலை பகுதிக்கு தாக்குதலுக்காக வந்த குழுவினர் தப்பிச் சென்றபோது, அவர் கள் மோட்டார் சைக்கிளொன்றை அவ்விடத்தில் விட்டுச் சென்றுள்ளனர்.

அந்த மோட்டார் சைக்கிள் வந்தாறுமூலை இளைஞர் குழுவால் ரயில் தண்டவாளத்தில் வைத்து எரிக்கப்பட்டுள்ளமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அதனையடுத்து, மோட்டார் சைக்கிளை தீ வைத்தமை மற்றும் தாக்குதல் சம்பவத்தோடு தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் 3 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, ஏறாவூர் நீதிமன்றத்தில் அன்றைய தினமே ஆஜர்ப்படுத்தப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், புதன்கிழமை மாலை குறித்த தாக்குதல் சம்பவத்தின்போது வாள்வெட்டு தாக்குதல் நடத்திய ஐயங்கேணி பகுதியை சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கூரிய ஆயுதமொன்றும் மீட்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விடுவிப்பதற்காக அவரது 45 வயதுடைய தாயும் 23 வயதுடைய மற்றுமொரு நபரும் 20 ஆயிரம் ரூபா பணத்தை இச்சம்பவம் தொடர்பில் செயலாற்றி வரும் பொலிஸ் பரிசோதகர் வை. விஜயராஜாவுக்கு இலஞ்சமாக வழங்கி, அவரது கடமைக்கு இடையூறு ஏற்படுத்த முயன்ற குற்றச்சாட்டில், சந்தேக நபரின் தாயும் மற்றைய நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இலஞ்சம் வழங்கிய காரணத்தால் கைதுசெய்யப்பட்ட இருவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் அதிகாரிக்கே கஞ்சாவை விற்பனை செய்த நபர் கைதானார்

## காத்தான்குடியில் சம்பவம்



காத்தான்குடி நகரிலுள்ள பிரபல பெண் பாடசாலைக்கு முன்னால் கேரளா கஞ்சாவை விற்பனை செய்து வந்த நபரொருவர் நேற்று (வியாழக்கிழமை) காலை கைது செய்யப்பட்டார் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைவஸ்த்து ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாமுதீன் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றையடுத்து கைது செய்யப்பட்ட நபரின் தொலைபேசி இலக்கத்தைப்பெற்ற போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி குறித்த நபரிடம் 'கஞ்சா வேணும்' எனக் கேட்டுள்ளார்.

குறித்த பாடசாலைக்கு முன்னால் வருமாறு அவர் கூறவே, பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சென்ற போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு கேரளா கஞ்சாவை வாங்கும் நிலையிலேயே கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரிடமிருந்து சிறிய பக்கட்டுகளைக் கொண்ட கேரளா கஞ்சா பக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ருமேனியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறிப் மோசடி

## 24 வயதுடைய இளைஞர் கைது

ருமேனியாவில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி பண மோசடி செய்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முந்தலம் பொலிஸாரால் கருங்கலே வீதிக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் புத்தளம் நீதழவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

முந்தலம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு விண்ணப்பிக்க மீண்டும் வாய்ப்பளிப்பு

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பரீட்சகர்களை இணைத்துக்கொள்ள பரீட்சைகள் திணைக்களம் மீண்டும் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

வியாழக்கிழமை முதல் எதிர்வரும் மே 2 ஆம் திகதி வரையில் இதற்கான விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.




பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம், விவசாய விஞ்ஞானம், உயிரியல், இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடகக்கற்கையும், வணிகக்கல்வி, பொறியியல் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விடைத்தாள் மதிப்பீட்டுக்கு ஏற்கனவே காலக்கெடுவுக்குள் விண்ணப்பிக்காத ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை, விண்ணப்பதாரிகள், தமது பிள்ளை அல்லது குடும்ப உறுப்பினர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் அவர்கள் தோற்றிய பாடம் அல்லாத ஏனைய பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும் எனப் பரீட்சைகள் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.



# சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கு விசேட வாகனங்கள்

கடற்கரையோரங்களை அண்டியதாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட விசேட வாகனங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டுள்ளார்.

கடற்கரையோரங்களை அண்டியதாக இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு ஆட்கடத்தல்களை தடுப்பதற்காக ஐடியல் மோட்டார் நிறுவனத்தால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 3 விசேட வாகனங்கள் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடலோர மற்றும் குளம் சார்ந்த பகுதிகள் மற்றும் எந்த கரடுமுரடான நிலப்பரப்பிலும் கடற்படை நடவடிக்கைகளுக்கு இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வாகனங்கள், கொழும்பு மற்றும் மன்னார் கடற்பகுதிகளில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக எதிர்காலத்தில் பயன்படுத்தப்பட உள்ளன. தற்போது இலங்கை கடற்படையின் பொறுப்பில் உள்ள இந்த வாகனங்களின் பயன்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி முன்னிலையில் காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளும் தரப்பின் முடிவு வரவேற்பிற்குரியது

பயங்கரவாதத் தடைச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதைக் காலவரையறை இன்றி ஒத்திப்போட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது ஆளும் தரப்பு. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச நாடாளுமன்றத்தில் இன்று இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். ஆளுந்தரப்பின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது.

இந்தச் சட்ட வரைவு ஆளும் தரப்பால் அரசிதழ் (வர்த்தமானி) மூலம் அறிவிக்கப்பட்டது முதலே ஆளும் தரப்பைத் தவிர்த்து மற்றைய எல்லாத் தரப்புக்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டும் எதிர்க்கப்பட்டும் வந்தது. மக்களினதும் பொது அமைப்புக்களினதும் கடும் எதிர்ப்பை அடுத்து இந்தச் சட்டத்தின் பொருத்தமற்ற பகுதிகளை நீக்கிவிடுமாறு மகாநாயக்க தேரர்களே அறிவிக்குமளவிற்கு அந்த எதிர்ப்பின் வலு இருந்தது.

இப்போது அது தமது தயாரிப்புச் சட்ட வரைவல்ல, 2015ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ அரசுத் தலைவராக இருந்தபோது தயாரிக்கப்பட்ட வரைவு என்று சமாளிப்புடன் அதனை மீளப் பெற்றிருக்கிறது ஆளும் தரப்பு. எப்படியாக இருப்பினும் மிக மோசமான இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மீளப் பெறப்பட்டது ஆளும் தரப்பு எடுத்த சிறப்பான முடிவு.

அதேநேரம் திருத்தங்களின் பின்னர் இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் மீண்டும் முன்வைக்கப்படும் என்றும் ஆளுந் தரப்பு அறிவித்துள்ளது. அனைவரின் கருத்துக்களும் உடன்பாடுகளும் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படும் என்றும் நீதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

ஆளும் தரப்பின் இந்த முடிவு சரியானதல்ல. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முற்றாகக் கைவிடப்படவேண்டும். அதுமட்டுமல்ல தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமும் நீக்கப்படவேண்டும். அந்தச் சட்டத்தை நீக்குவதற்காகத்தான் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை ஆளும் தரப்பு அறிமுகப்படுத்தியது. அந்தச் சட்டத்தை நீக்குவதாக பன்னாடுகளுக்கும் குறிப்பாக மேற்குலக நாடுகளுக்கு ஆளும் தரப்பு உறுதியளித்திருக்கிறது. அதனையும் ஆளும் தரப்பு நிறைவேற்றவேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டமே மிக மோசமானது அதனை நீக்கவேண்டும் என்று வலியுறுத்தும் நிலையில் அதைவிட மோசமான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது என்பது – அது முன்னைய ஆட்சியில்தயாரிக்கப்பட்டதுஎன்றாலும்கூட–பொறுப்பற்ற, சிறுபிள்ளைத்தனமான செயல். மற்றவர்களை முட்டாள்களாக்கும் முயற்சி. அதற்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒருமித்த எதிர்ப்பே ஆளும் தரப்பை இப்போது பின்வாங்க வைத்திருக்கிறது. எனவே அந்த எதிர்ப்பை தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகவும் தொடர்ந்து அதனையும் நீக்கும் வரை அனைத்துத் தரப்புக்களும் செயற்படவேண்டியது அவசியம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து விசாரணைகளையும் சாதாரண சட்டங்களின் கீழும் விசாரிக்க முடியும் என்கிறபோது, தேவைப்பட்டால் அத்தகைய குற்றவியல் சட்டங்களை மேலும் பலப்படுத்துவதற்கான திருத்தங்களை ஆளும் தரப்பு நாடாளுமன்றத்தில் முன்வைக்கவேண்டுமேதவிர, திருத்தப்பட்டபயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அல்ல. ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் தம் மீதான எதிர்ப்புக்களை அடக்கி ஒடுக்குவதற்கு மிலேச்சத்தனமான அதிகாரத்தை வழங்கும் இதுபோன்ற சட்டங்கள் நாகரிகமுள்ள ஒரு சமுதாயத்திற்குப் பொருத்தமானதல்ல என்பதை நினைவில் வைத்து நடக்கவேண்டும் ஆளும் தரப்பு.

# கொரிய நாட்டு வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏற்பாடு

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

கொரிய நாட்டில் வருடமொன்றுக்கு கிடைக்கப் பெறும் வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், தற்போது கிடைக்கப் பெறும் 6,500 வேலை வாய்ப்பு எண்ணிக்கையை 8,000 ஆக அதிகரிப்பதற்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரதெரிவித்தார்.

கொரிய நாட்டு மனித வள திணைக்களத்தின் பணிப்பாளர்மற்றும்அமைச்சர் மனு நாணாயக்கார ஆகியோருக்கிடையில் நடைபெற்றகலந்துரையாடலின்போது இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.



கொரிய மொழித் தேர்ச்சி பெற்று தற்போது இணையத்தளத்தில் வேலை தேடும் மற்றும் இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியன்றுடன் இணையத்தளத்தில் காலாவதியாகும்.

உற்பத்தி பிரிவு விண்ணப்பதாரிகளில் 600 பேருக்கு கப்பல் கட்டுமான துறை யில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளது. ஆகவே, கப்பல் கட்டுமான துறைகளில் தொழில் புரிய விரும்புபவர்கள் இந்தத்தொழிலுக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# இலங்கை அதிகாரிகள் வேறுயாரேனும் மீதும் அமெரிக்கா இனியும் நடவடிக்கை எடுக்குமா?

## தூதரக பேச்சாளர் பதில் என்ன?

மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பாக சர்வதேச அளவில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமெரிக்கா தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் மதிப்பாய்வு செய்துவருகின்றது எனத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதரகம், அமெரிக்கா உலகளாவிய ரீதியில் தனது அதிகாரத்தை பயன்படுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

வசந்தகரணாகொட போன்று எதிர்காலத்தில் இலங்கையின் வேறு அதிகாரிகளும் தடைப்பட்டியலில் சேர்க்கப்படுவார்களா என ஊடகமொன்றின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமெரிக்கதூதரக பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அரசாங்க அதிகாரி மிகமோசமான ஊழல் அல்லது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என நம்பகதன்மை மிக்க தகவல் கிடைத்தால் அந்த அதிகாரியையும் அவரது குடும்பத்தினரையும் பிரிவு 7031 சியின் கீழ் இராஜாங்க செயலாளர் தடைப்பட்டியலில் சேர்ப்பார் எனத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா பாதிக்கப்பட்;டவர்களுக்கு நீதியையும் மனித உரிமை மீறல்கள் துஷ்பிரயோகங்களுக்கு காரணமானவர்களுக்கு பொறுப்புக்கூறலையும் உறுதிசெய்வது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது என பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# ‘மலையகம் 200’ விசேட முத்திரை வெளியிட ஏற்பாடு; முத்திரைக்கான மாதிரிகளை மக்களிடமிருந்து கோரல்!

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அம்மக்கள் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் இதர விடயங்களுக்கு வழங்கிய பங்களிப்பை கௌரவித்து, அவர்களைப் பாராட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதற்காக ’மலையகம் 200’ எனும் தொனிப் பொருளின் கீழ் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதன் ஓர் அங்கமாக, விசேட முத்திரையொன்றை வெளியிடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அந்த முத்திரை எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும், அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை என்பன குறித்து மக்களிடமிருந்தும் கருத்துகள், யோசனைகள் கோரப்பட்டுள்ளன.

அந்த முத்திரை மலையக கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, மக்களிடத்தில் ஏதேனும் யோசனை அல்லது மாதிரி (முத்திரை எவ்வாறு இருக்க வேண்டும் என வரைதல்) இருந்தால், அவற்றை உரிய முறையில் எதிர்வரும் மே 10ஆம் திகதிக்கு முன்னர் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு, இலக்கம் 45, புனித மைக்கல் வீதி, கொழும்பு ஃ 03 என்ற முகவரிக்கு பதிவுத்த பாலில் அனுப்பி வைக்குமாறு மேற்படி அமைச்சு பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

# பெண்ணிடமிருந்து பணப்பை உள்ளிட்டவற்றை கொள்ளையிட்ட இருவர் மொரட்டுவவில் கைது

மொரட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பெண்ணொருவரிடமிருந்து பணப்பை உள்ளிட்ட சொத்துகளை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் வியாழக்கிழமை (27) கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

முன்னதாக, மொரட்டுவ பகுதியில் முச்சக்கரவண்டியொன்றில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணொருவரின்பணப்பை,தங்கபென்டன் மற்றும் தொலைபேசி உள்ளிட்ட சொத் துக்களை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.



இந்நிலையில் அதனுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களான இருவர் இரத்மலானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 22 மற்றும் 23 வயதுடைய இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்களிடமிருந்துதிருடப்பட்ட சொத்துகளும் கொள்ளைச் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஓட்டோவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் மொரட் டுவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். மொரட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதான ஊடகவியலாளர் கோகிலதாசன் விடுதலை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் கைதுசெய்யப்பட்ட கிண்ணையடி வாழைச்சேனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் முருகுபிள்ளை கோகிலதாசன் மேற்படி வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நகர்த்தல் பத்திரத்தின் மூலம் வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று (வெள்ளிக்கிழமை) எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிக்கையின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட வழக்கிற்கு சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் மற்றும் சட்டத்தரணி ரணித்தா ஆகியோரின் ஆலோசனையின் பேரில் சட்டத்தரணி பி.ஜெசிங்கம் ஆஜராகியிருந்தார்.

இவர் முகநூலில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வான மாவீரர் நிகழ்வு தொடர்பான பதிவைப் பதிவிட்டமை தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 28.11.2020 ஆம் திகதி அன்று வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.




தொடர்ந்து ஒரு வருடமும் 5 மாதங்கள் மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.பின்னர் 07.03.2022 ஆம் திகதியன்று நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிரந்தார்.

இருந்தபோதிலும் இவரது வழக்கு இன்று வரை நடைபெற்றது. இவரது விடுதலை தொடர்பாக சர்வதேச உள்ளூர் சமூக அமைப்புக்கள் மற்றும் ஊடக அமைப்புக்கள் குரல் கொடுத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.